
# ஜியார்டனோ புரூனோ

490



490.
4-54
104668

இரா. நெடுஞ்செழியன் M.A

# ஜியார்டனோ புரூனோ

இரா. நெடுஞ்செழியன் M. A.

மறுமலர்ச்சி நூல் நிலையம்
8. குமரப்ப முதலித்தெரு
சென்னை-1.

பதிப்புரிமை
முதற்பதிப்பு நவம்பர்—1954

விலை அணா எட்டு

ராயன் அச்சகம் சென்னை-1

# பதிப்புரை

"ஜியார்டனோ புருனோ" "மன்றம்" இதழில் வெளிவந்தவை.

புத்தக வடிவில் வெளியிட வேண்டுமென்று கேட்டேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் M.A. அவா கள் சம்மதம் கொடுத்தார்கள். அவர்கட்குஎன் நன்றி அறிதலை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மா. திருநாவுக்கரசு

# ஜியார்டனே புருனே

திராட்சைக் கொடிகள் படர்ந்த மலைக் குன்றின் சரிவிலே படுத்துக்கொண்டு, எதிரே காணப்படும் நீலக் கடலினை நோக்கிய வண்ணம், நீடு சிந்தனையில் ஈடுபட்டிருக்கிறான் ஒரு இளைஞன். உலகோர் காணவிரும்பும் எழிற்கூடமாயும், இத்தாலியின் இணையற்ற செல்வமாயும் விளங்கும் நேப்பிள்ஸ், அவன் கண்முன்னே, தன் அழகெல்லாங் காட்டிக்கிடக்கின்றது. வளைகுடா வடிவிலே அமைந்த வனப்பு மிகுந்த கடற்கரை—வண்ணப் பூக்கள் பூத்துக் குலுங்க, செழித்து வளர்ந்திருக்கும் மரம் செடி கொடிகள்—அடுக்கடுக்காய் நீண்டும் வளைந்தும், உயர்ந்தும் தாழ்ந்தும் காணப்படும் மலைகள்-அந்த மலைமுகடுகளிலே தங்கியிருந்து, மேலெழுந்து, வெள்ளிய வானிலே வட்டமிடும் கருமுகில்கள்! இவைகளைக் கண்டு அடிக்கடி மனம் பூரித்துப்போகும் அந்த இளைஞன், அன்று கவலை தோய்ந்த முகத்தோடு காணப்படுகிறான்.

கவலையற்றிருக்கும் இளமைப் பருவத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டிய நெருக்கடி—எந்த வழியில் எதிர்காலத்தை ஈடேற்றுவது என்பதே அவ்விளைஞனுக்கு ஏற்பட்டிருக்கும் கவலை. அவன் மனக்கண்முன் இரண்டு நிலைமைகள் போட்டியிட்டு நிற்கின்றன. எந்த நிலைமையை ஏற்பது என்பதே அவனது கவலை. போர்வாள் ஏந்துவதா? வேதநூல் தாங்குவதா?—வட்டுடை

தரிப்பதா? வெள்ளுடை அணிவதா?—போர்க்களம் புகுவதா? மாதாகோயில் நுழைவதா?—போர்வீரனாய் மாறுவதா? பாதிரியாய்ப்போவதா? இரண்டு நிலைமைகளுக்குமுள்ள ஏற்றத்தாழ்வு, நன்மை தீமை, நிறை குறை ஆகியவைபற்றி நீடு சிந்திக்கிறான், நாடும் அரசும் குழப்பம் நிறைந்தனவாகவும், மாதாகோயில் மடம் அமைதி நிறைந்ததாகவும் அவனுக்குத் தோன்றுகின்றன. கோயில் விடுதியில் நுழைந்தால் அங்கு நூல்கள் இருக்கும்; படிக்க வசதியிருக்கும்; அறிவைப் பெருக்கவும், உண்மை கண்டறியவும் வாய்ப்பு ஏற்படும் என்றெல்லாம் எண்ணமிடுகிறான். மேலும் ஆன்செல்ம் என்ற பாதிரியார் அந்த இளைஞனைக் காணும்போதெல்லாம், அவன் மாதாகோயில் சீடனாக மாறிவிட்டால், வாழ்க்கையின் குறிக்கோளை அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும் என்று கூறியிருக்கிறார். இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்த்து இறுதியில் கோயில் விடுதியில் புகுவது என்ற உறுதியான முடிவுக்கு வந்து, முகமலர்ச்சியோடு எழுகிறான். அவன் கண்கள் ஒளி வீசுகின்றன; அவனது கன்னங்களில் மகிழ்ச்சி விளையாடுகிறது. தான் நுழையப்போகும் புது இடத்தில் கல்வி தனக்குத் தோழமையாக இருக்கும்; உண்மை தனக்கு வழிகாட்டியாக இருக்கும் என்றெல்லாம் எண்ணிப் பெருமிதங் கொண்டவாறே நடக்கிறான். யார் அவன்? அவன் தான் **ஜியார்டனே புருனே!**

புருனே, நோலா என்ற சிறுநகரிலிருந்த தன் வீடு போய்ச்சேர அன்று சற்று நேரமாகி விட்டது. புருனேவின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அவனுடைய தாய் "ஜியார்டனே! ஏன் கண்ணே இன்று இவ்வளவு நேரமாகிவிட்டது? நீ நீண்ட நாழிகையாய் வர வில்லையே! உன்னுடைய சிற்றப்பா இதுவரையில் உனக்காகக் காத்திருந்துவிட்டு, இப்பொழுதுதான் மிகச் சோர்வோடு சென்றார். நீ இப்பொழுது வளர்ந்தவனாக

வும் வலியுள்ளவனாகவும் ஆன ஒரு இளைஞனாக இருப்பதால், நீ அழுந்திக்கிடக்கும் நூல்களைத் தூக்கி எறிந்துவிட்டு, ஒரு வீர இளைஞனுக்கு அழகான போர்க்கருவிகளைத் தாங்கவேண்டுமென்று அவர் சொல்லிப்போனார்" என்று இளகிய மனதுடன் கூறினாள்.

அதுகேட்ட புரூனோ, "அம்மா! நான் போர்க் கருவிகளை ஒருநாளும் ஏந்தமாட்டேன். சோம்பேறிகளாய் இருக்கும் சில சீமான்களின் கட்டளையை ஏற்று, என்னைச் சேர்ந்த மக்களைக் கொள்ளையிடவோ, கொலை செய்யவோ ஒருக்காலும் ஒருப்படேன், நான் மாதா கோவில் மடத்தில் சேர்ந்து, மதச்சீடனாகத் தீர்மானித்து விட்டேன். ஆன்செல்ம் பாதிரியார் எனக்குக் கல்வி கற்றுக்கொடுக்கவும், பயிற்சி தரவும் இசைந்துள்ளார். நானும் மடத்தின் ஒழுங்கு முறைப்படி நடக்க உறுதி மொழி அளிப்பதாகக் கூறிவிட்டேன். இரும்புக் கவசமும், கத்தியும், கேடயமும் தாங்கிப், போர்க்களம் புகுந்து. யாருக்கும் ஒரு தீங்கும் செய்யாத ஏழை எளியவர்களைக் கொன்று குவிப்பதைவிட, அறிஞர்கள் எழுதிய நூல்களைப் படித்தறிவதும், கற்றுத் தேர்வதும் நல்லதொரு வாழ்க்கை என்றே கருதுகிறேன்"

"என் அருமை கண்ணே! உன் சிற்றப்பா! உன் சிற்றப்பா அல்லவா அழைக்கிறார்!" என்று அஞ்சிய குரலில் தாய் மறுமொழி கூறினாள். புரூனோ, தெருவில் திரிவதைவிட, படிப்பதிலே கவலை செலுத்துவதையே அவள் அடிக்கடி அறிந்திருந்தாளாதலின், புரூனோவின் சொற்கேட்டு அவள் அதிர்ச்சியடையவதில்லை. தந்தையற்ற மகனுக்கு, அவனது சிற்றப்பாவால் என்ன கேடு விளையுமோ என்று எண்ணி ஏங்கினாள் தாய்.

தாயின் நிலைகண்ட புரூனோ, "என் சிற்றப்பா அவர் விருப்பப்படி வேண்டுமானால் அவரே சண்டை

செய்யட்டும் என்னை வேண்டுமானுல் திட்டிவிட்டுப் போகட்டும். அதற்காக நீங்கள் வருந்தவோ சினந்து கொள்ளவோ செய்யாதீர்கள், அம்மா!" என்று சிரித்துக்கொண்டே கூறினுன். உடனே தாயைக் கட்டிக் கொண்டு, முத்தமிட்டு அவள் கண்ணீரைத் துடைத் தான். தாயும் மகனின் முடிவுக்கு இசைந்தாள். வருத் தத்தோடு ஆனுல் பெருமிதத்தோடு மகனை மடாலயத் திற்கு அனுப்பிவைத்தாள்.

செயின்ட் டாமினிக் மடாலயத்தில் புகுந்ததும் மிக ஆவலோடும், மும்முரத்தோடும் மதநூல்களையும் பிற நூல்களையும் படிக்கத் தொடங்கினுன். பாதிரியாராவதற் கான படிப்பைச் சில ஆண்டுகளில் முடித்த பிறகு, மடத்தின் ஒழுங்குமுறைப்படி நடப்பதாக உறுதிமொழி அளித்து, குருமாரின் நீண்ட அங்கியை அணிந்து கொண்டான். புரூனேவிடம் அன்பு காட்டி, அவனை ஆதரித்துவந்த ஆன்செல்ம் பாதிரியார், புரூனேவின் அறிவின் தெளிவையும், கருத்தாழத்தையும் கண்டு வியந்தார் என்றாலும், அவனுடைய பாதிரிக்குல்லாயின் கீழே இருக்கும் அவனது மூளை வாளாக்கிடக்காது என்றும், அந்த வலியுள்ள மூளை அவனுக்கே தொல்லை பல விளைவிக்கும் என்றும் எண்ணி அடிக்கடி பெருமூச் செறிந்து வந்தார். புரூனே மதக் கருத்துக்கள் பற்றிப் பல கேள்விகள் கேட்பான்; அவற்றிற்கு அறிவுக்கொத்த விடைகள் வராதவரையில் விடமாட்டான். ரோம் பழகிக் கொடுத்த பழக்கவழக்கங்களையும், மாதாகோயில் கற்றுக்கொடுத்த கொள்கைகளையும் அப்படியே ஏற்றுக் கொள்ள மறுத்து, அவைபற்றியும் கேள்விகள் கேட்கத் தொடங்கினுன். பழைய கொள்கைகளையும், உண்மை களையும் ஐயப்படுவதே 'பாபம்' என்பதை அவன் கடைபிடிக்கவில்லை. அவன் நாளடைவில் "நாஸ் திகன்" என்று கூறப்பட்டு, கொடுமைக்கு ஆளாக்கப் படுவானே என்பதை நினைத்து, ஆன்செல்ம் பாதிரியார்

அவனை அந்த வழியினின்றும் தடுத்து நிறுத்த முயன்றார். மாதா கோவிலையும், மத நூலையும் ஒருவன் ஐயப்படுகிறான் என்றால், அவனுக்கு அக்காலம் கொடுத்த பரிசுகள் சிறைத்தண்டனை, சித்ரவதை, வெட்டி வீழ்த்துதல், வெந்தழலில் பொசுக்குதல் போன்றவைகளாகும். ஆனால், புரூனோ தன் போக்கை மாற்றிக்கொள்ளாமலே, அந்தப் போக்கிலே மிக உன்னிப்பாக நின்றான்.

ஆன்செல்ம் பாதிரியார், "என் அருமை மகனே! மகனே! நீ அதிகமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறாய். கணக்கு வழக்கற்ற கேள்விகளைக் கேட்பதும், எழுதி வைக்கப்பட்டவைகளை மீறி நினைப்பதும் தொல்லை தருவனவாகும். வேத நூல்களைப்படி; நீ சொல்ல வேண்டிய மந்தரங்களைச் சொல்லு; கோபர்னிக்கஸையும் அவருடைய கனவுகளையும் ஒதுக்கித்தள்ளு! அசைக்க முடியாதபடி உலகை ஆண்டவன் நிலைநிறுத்திவைத்திருக்கிறார் என்பதைப் புனிதவேதம் அழுத்தந்திருத்தமாகச் சொல்லவில்லையா? ஞாயிற்றை அப்படியே நிற்கும்படி ஜோஷுவா கட்டளையிடவில்லையா? ஞாயிறு அப்படியே நிற்கிறது என்றால், அது கோபர்னிக்கஸின் கருத்துப்படி தவறுடையதல்லவா? ஜியார்டனோ! என் மைந்தா! நீ மிக்க அக்கரை எடுத்துக்கொள்ளாவிட்டால், உன்னுடைய கேள்விகள் உன்னை ஒரு மத விரோதியாகக் காட்டிவிடும். குற்றங்காணும் குருமார்களின் குழு, நானே உனக்குச் சலுகை காட்டுவதாக எண்ணிவிடும்" என்று புரூனோவிடம் உருக்கமாகக் கூறினார்.

புரூனோ அந்தப் பாதிரியாரின் கைகளைப் பிடித்து முத்தமிட்டு, அவர் ஆறுதல் பெறும் வண்ணம் சில சொற்கள் சொல்லுவான். அவன் தன் அறைக்குச் சென்றதும் மேலும் கீழுமாக உலாவுவான்; சிந்திப்பான்; ஆராய்வான்; வியப்படைவான்; வெளியேறி

விட விரும்புவான். மடத்தின் கடமைகள் அவனைக் கட்டிப் போட்டிருப்பதாகவே எண்ணுவான். வெளியுலகில் நடைபெறும் அறிவுப் போர்களில் கலந்து கொள்ள வேண்டும் என்று ஆவலுறுவான், ஐரோப்பாவின் பல்கலைக் கழகங்களில் பழைய முறைக்கும் புதிய முறைக்கும், பழைய தத்துவத்திற்கும் புதிய தத்வத்துதிற்கும் நடைபெறும் போட்டாபோட்டிகளில் தானும் கலந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பம் அவனது உள்ளத்தைக் கலக்கிக் கொண்டிருந்தது. அந்த இளஞ்சிங்கம் தான் விரும்பியபடி சுற்றித்திரிய முடியாத கூண்டிலே அடைபட்டிருப்பதாகவே எண்ணிற்று!

அந்தக்காலத்தில் **அரிஸ்டாட்டிலின்** கருத்துக்களே மாதாகோயிலில் போற்றப்பட்டன; ஆனால் புருனோ, அவற்றைவிட **பிதகாரஸ், பிளேட்டோ** ஆகியோரின் கருத்துக்களையே சிறந்தனவாகப் போற்றினான். இதன் காரணமாக ஆசிரியர்களுக்கும் அவனுக்கும் சச்சரவு மூளும் ஞாயிறே நமது மண்டலத்தின் நடு நிலையாக நிற்கிறது என்றும், உலகமான கோள் (கிரகம்) அதனைச் சுற்றி வருகிறது என்றும் சொல்லிய பிதகாரஸின் கருத்தையே ஜியார்டனோ பின்பற்றினான். ஆகையினால் கோபர்னிக்கஸின் கருத்தையும் இயல்பாகவே கடைப்பிடிக்கும் நிலையில் அவன் விளங்கினான். ஆன் செல்வம் பாதிரியாரின் அறிவுரைகள் அவனை எந்த வகையிலும் மாற்றவில்லை. அந்த அன்பு காட்டும் பாதிரியாருக்கு உள்ளபடியே வருத்தம் உண்டாக்கக்கூடாது என்பதுதான் ஜியார்டனோவின் எண்ணம்; ஆனால் அதே நிலையில் உண்மைக்கு மாறாகவும் நடக்க அவனுக்கு விருப்பமில்லை.

சில வாரங்கள் கழித்து மடத்திலுள்ள குருமார்களின் தீய பார்வை புருனோவின்மீது விழ ஆரம்பித்திருப்பதை, ஆன்செல்ம் பாதிரியார் கண்டுகொண்டார்.

புரூனே "நோவாவின் படகு" என்ற தலைப்பில் சிறு வெளியீடு எழுதி. அதில் மடத்தின் கேடான முறைகளையும், மடாதிபதிகளின் கோலாகலமான வாழ்வையும், அறியாமைப் போக்கையும் கேலியும் கிண்டலும் செய்திருந்தான். இது மடத்தின் தலைமைக்கு எட்டிற்று "மதவிரோதி" என்ற சொல் அங்கிருந்த பாதிரிமார், குருமார் ஆகியோர் ஒவ்வொருவரின் வாயிலும் தட்டுப்பட்டது. மடத்தின் தலைமை அதிபதியால் கடுமையான நடவடிக்கை அந்த 'உதவாக்கரை சீடன்' மீது எடுக்கப்படும என்று அவர்களால் எதிர் பார்க்கப்பட்டது.

ஒருநாள் பிற்பகல் மடத்தை அடுத்தத் தோட்டத்தின் அருகிலிருந்த திராட்சைக் கொல்லையில் புரூனே படுத்துக்கொண்டிருந்தான். அவ்வேளையில் ஆன்செல்ம் பாதிரியார் அவனை நோக்கி விரைவாகவும் வேதனை கொண்ட முகத்தோடும் வந்தார். புரூனே அவரைக் கண்டு எழுந்து, அவரை எதிர்கொண்டு சென்று, "என்ன நேர்ந்தது?" என்று மெல்ல வினவினான். வேதனையும், வருத்தமும், விரைவும் அவரைத் தாக்க அவர் மூச்சுத் திணறிப்போய் அப்படியே உட்கார்ந்துவிட்டார். அவர் பேசும் ஆற்றலைப் பெறும் வரையில், ஜியார்டனே அவரை நோக்கி உற்றுக் கவனித்துக்கொண்டிருந்தான். அவர் தெம்பு பெற்றவுடன், 'ஜியார்டனே! என் அருமை மைந்தா! உன்னைச்சுற்றி ஆபத்து நெருங்கிவிட்டது. நீ முட்டாள் தனமாகக் கூறிய உலகம் நகருகிறது என்பதும், இந்த உலகைத் தவிர வேறு பல உலகங்கள் நமது தலைகளுக்கு மேலே நட்சத்திரங்களுக்கிடையே இருக்கின்றன என்பதும் ஆன கூற்றுக்கள் மடாதிபதியின் காதுக்குப் போய்ச் சேர்ந்து விட்டன. நீ தகராறு வளர்த்துக் கொண்ட ஜெரோம் பாதிரியார் நீ ஒரு மத விரோதி என்றும், நீ இந்த நாட்டில் இருப்பது மடத்தின் நல்ல பெயருக்கு ஆபத்து விளைப்பது என்றும் மடாதிபதி

யிடம் கூறிவிட்டார். நீ அரிஸ்டாடில் கருத்துக்களை மறுப்பது பற்றியும், கோபர்னிகஸின் புதிய கருத்துக்களை ஆதரிப்பது பற்றியும், எல்லாப் பாதிரிமார்கள் முன்னிலையில், உன்னைக் கேள்வி கேட்க மடாதிபதி முடிவு செய்துவிட்டார். நான் மிகவும் அஞ்சுகிறேன்'' என்று தழதழத்தக் குரலில் கூறினர்.

அதுகேட்ட புருனே உடன் எழுந்திருந்து, "எதற்கும் அஞ்சவேண்டாம்! ஐயா! எனக்காக நீங்கள் அஞ்சவேண்டாம்! ஏனென்றால் நானே எனக்காக அஞ்சுவதில்லை'' என்று அழுத்தந் திருத்தமாகவும், தன்னம்பிக்கையோடும், பெருமிதத்தோடும் மறுமொழி பகர்ந்தான்.

"ஆகையினலேதான் நான் அஞ்சுகிறேன், மகனே! ஆண்டவனுக்கு அஞ்சாதவர்களைச் சாத்தான் மிக எளிதாகப் பிடித்தாட்டுவான். உன்னுடைய நோக்குகள் மிக உறுதியுடையனவாக இருக்கின்றன. வெட்ட வெளியில் உலகம் சுழல்கின்றது என்ற உன்னுடைய உறுதியான கருத்தை, அதனேடு தொடர்புடைய மற்றக் கருத்துக்களோடு, நீ எடை போட்டுப் பார்க்கவில்லை. மேலும் அடியும் அற்ற உன்னுடைய அண்டத்தில், நரகம், இறந்துபோனவர்களின் ஆன்மாக்கள், இருட்டில் விலங்கிடப்பட்ட பேய்கள் ஆகிய இவையெல்லாம் எங்கே இருக்கக்கூடும் என்று நம்புகிறய்?'' என்று பாதிரியார் மனவருத்தத்தோடு வினவினர்.

"உண்மைதான்! சாத்தானின் நிலயியலைப் பற்றி நான் என் மூளையைப் போட்டுக் குழப்பிக்கொள்வதில்லை. உலகத்திற்குக் கீழே அடிப்பாகம் என்று ஒன்று இல்லைதான். அது ஞாயிறறைச் சுற்றி எப்பொழுதும் சுழன்றுகொண்டிருக்கிறது. என்பதைத்தான் இப்பொழுது அறிகிறேம்'' என்று புருனே சிரித்துக் கொண்டே பக்குவமாகக் கூறினன்.

இந்தக் கேட்கக்கூடாத சொற்களைக் கேட்டதற்காகப் பாதிரியார் தன் முகத்தின் எதிரே கையினுல் சிலுவை போட்டுக்கொண்டார்.

"பேசாதே! பேசாதே! மகனே! நீ எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். இல்லாவிட்டால், சாத்தானே வந்து உன்னை நரகத்தின் சிறைக்கு இழுத்துச் சென்று விடுவான் அங்கிருந்து உன்னுல் மீண்டுவர முடியாது. ஆண்டவன் உலகிலிருந்து மேனேக்கி வானுலகம் சென்ருன் என்று புனிதவேதம் கூறுகின்றது. நீ கூறுகிறபடி உலகம் சுற்றிக் கொண்டேயிருந்தால், இது எப்படி இயலும்? நீ வேடிக்கையாகச் சொல்வதெல்லாம் மதத்திற்கு மாறுபட்ட முட்டாள்தனங்களாகும். நீ சொல்லுவது உண்மையானுல், அன்னை மேரியும், அருமைப் புனிதர்களும் சொல்லியவைகளெல்லாம் நடவாதனவாக அல்லவோ இருக்க வேண்டும்," என்று அந்தக் கிழப்பாதிரியார் கூறிவிட்டு, தன் முகத்தின் எதிரே மீண்டும் ஒருமுறை சிலுவையைப் போட்டுக்கொண்டார்.

பாதிரியாரின் கடைசி வாக்கியத்தைக் கேட்டவுடன் புருேனேவுக்குப் புன்சிரிப்பு தோன்றிற்று! அது மெல்ல அவன் வாயிலே கொப்பளித்தது. அவரிடம் ஏதோ மறுமொழி கூற அவனது உதடுகள் துடித்தன. ஏதோ சொல்ல வாயெடுத்து, அதற்குள் தன்னைத் தானே அடக்கிக்கொண்டு, இந்தக் கிழவரின் நம்பிக்கையை எப்படி மாற்றமுடியும்' என்று தனக்குள்ளேயே எண்ணிக்கொண்டு, ஒரு சொல்லும் சொல்லாமல் கடலை நோக்கி ஆழச் சிந்தித்துக்கொண்டு நின்ருன்.

"ஜியார்டனே! நான் சொல்வதைக் கேள். நீ இளைஞனுகவும், வீரனுகவும் இருக்கிருய்; ஆனுல் உன்னுடைய இளமையும், உன்னுடைய வீரமும் நாளைய

வாழ்வுக்குப் பயன்படாது. நான் உனக்கு முன்னெச்ச ரிக்கை செய்வதற்காகத் தண்டனைகள் ஏற்கவேண்டி வரும். ஆனால் உன்னை உன்னுடைய ஆபத்திலிருந்து தடுக்க எத்தகைய பாடுபட்டேனும் நான் முன்னெச் செரிக்கை செய்தே தீருவேன். உன்னுடைய விடைகளி லிருந்தே உன்னைப் பிடித்து, உனக்கு மதவிரோதி என்று பெயரிட அவர்களெல்லாம் சதி செய்துகொண் டிருக்கிறார்கள்"

ஆன்செல்ம் பாதிரியர் மேலும் தொடர்ந்தார். அவர் குரல் நடுங்கியது. "நேப்பிள்ஸிலுள்ள தலைமை யிடத்துக்குத் தூதுவன் ஒருவன் போயுள்ளான். மதவி ரோதக் குற்றம் கண்டு பிடிக்கும் அலுவலாளர் நாளை இங்கு வந்து..."

ஒளி வீசிக்கொண்டிருந்த புரூனேவின் முகம் மயங் கியது. பாதிரியாரின் தோளில் தன் கையை மெல்ல வைத்து. "ஐயா! நான் என்ன செய்யவேண்டும் என்று சொல்லுகிறீர்கள்? மத விசாரணைக்குழுவின் கொடுமை களிலிருந்து தப்ப என்னைப் பொய் சொல்லவைக்க மாட்டீர்களல்லவா?"

"ஓடிப்போய்விடு! ஓடிப்போய்விடு! இன்னும் போதுமான நேரம் இருப்பதால் ஓடிப்போய்விடு! ஓ, என் அருமை மகனே! சித்ரவதை மரத்தில் கட்டி வைத்து, உன்னுடைய எலும்புகள் நொறுக்கப்படுவதை யும், உன்னுடைய இளமை ததும்பும் முகம் வலிதாங்கா மல் கோணுவதையும் என்னால் பொறுத்துக் கொண்டு பார்க்க இயலாது. ஓ! நான் அதைப் பார்த்திருக்கிறேன்! பலமுறை பார்த்திருக்கிறேன்" என்று மெல்லிய குரலில் பேசி, மேல்பேச நா எழாமல் அப்படியே அசைவற்று இருந்துவிட்டார் ஆன்செல்ம் பாதிரியார். திராட்சைக் கொல்லையை நோக்கி யாரோ வருபவரின் காலடியோசை

யைக் கேட்டவுடன் அவர் வாரிச் சுருட்டி எழுந்து விரைவாகப் போய்விட்டார்.

ஜியார்டார்னோ புருனோ, கடலைநோக்கிப் பார்வையைச் செலுத்தியவண்ணம், மேற்கொண்டு ஒரு மணி நேரம் அங்கேயே தங்கியிருந்தான். அவனுடைய இதயம் துடிதுடித்துக் கொண்டிருந்தது. எப்படி விரைவாகத் தப்பிப் போகலாம் என்பது பற்றிய ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான். திடீரென்று அவனுடைய முகம் ஒளிபெற்றது. புன்சிரிப்பு அவனுடைய உதடுகளிலே பூத்தது. உடனே எழுந்து நின்றான், "பாதிரிமார்களே! நான் 'நோவாவின் படகை' விட்டு அகல்கிறேன்; ஏனென்றால், அது இனி எனக்குப் பாதுகாப்புத்தரும் படகாக இல்லை!" என்று கூறிக்கொண்டே தன் அறையை நோக்கி நடந்தான்.

இரவில் எல்லோரும் உறங்கிக் கொண்டிருந்த பொழுது, ஜியார்டனோ மெல்ல எழுந்தான். தன் இடுப்பில் அங்கியின்மேல் சுற்றியிருந்த கறுப்புத் துணிப் பட்டையை அவிழ்த்தான். அதன் ஒரு முனையை சாளரத்தின் சட்டம் ஒன்றில் முடிந்துவிட்டு, அதனைப் பிடித்துக் கொண்டே சாளரத்தின் சிறுவழியாக வெளியேறி, மெல்ல ஓசையெழுப்பாமல் தரையை நொக்கி இறங்கினான். பிறகு வடக்குநோக்கி விறுவிறு என்று விரைந்து சென்றான், விடுதியின் கட்டுப்பாடுகளிலிருந்தும், தண்டனையின் கொடுமைகளினின்றும் விடுபட்டோம் என்ற விடுதலையுணர்ச்சியுடன் எங்கே போகிறோம் என்று தெரியால் போய்க்கொண்டே இருந்தான்.

மறுநாள், நேப்பிள்ஸிலுள்ள தலைமை மடத்தின் மண்டபத்தில் கூடும் மதவிசாரணைக் குழுவின்முன் கொண்டுபோய் நிறுத்துவதற்காக, ஜியார்டனோவைப் பிடிக்க, ஏவலாளர்கள் வந்தார்கள். ஜியார்டனோவின்

அறைக்குச் சென்றார்கள். அறை வெற்றிடமாகக் காட்சியளித்தது. ஜியார்டனோ தப்பி ஓடிவிட்டான் என்பதை அறிந்துகொண்டார்கள். என்றாலும் மதவிசாரணைக் குழுவினர் அவனை வாளா விட்டுவிடவுல்லை. அவனைக் கிருஸ்துமதத்தை விட்டு விலக்கி, அவனுடைய உடலையும், உயிரையும் பேய் பிடித்துக்கொள்வதாக என்று சாபமிடவும் செய்தார்கள். ஜியார்டனோவோ உறுதியுடனும் உணர்ச்சியுடனும் அபினைன் மலைகளை நோக்கி நடந்தவண்ண மிருந்தான்.

புருனோ கால்நடையாகவே நடந்துசென்றும், ஆங்காங்கு கிடைக்கும் வழிப்போக்கு வண்டிகளில் ஏறிச் சென்றும் நெடுந்தொலைவு கடந்தான். இறுதியாக நகரம் ஒன்று அவன் கண் முன் எதிர்ப்பட்டது. அப்பொழுதே நகருக்குள் நுழைந்தால், பலர் தன்னை யார் என்று கேள்விகேட்க இடமேற்படும் என்று கருதி, பொழுது சாயும்காலம்வரையில் நகருக்கு வெளியே தங்கியிருந்து, இருட்டினதும் நகருக்குள் நுழைந்தான். ஏதோ குற்றம் செய்துவிட்டவன் போலவும், நீதிக்குப் பயந்து ஓடுபவன் போலவும், ஒளிந்து ஒளிந்து, யார் கண்ணிலும் படா வண்ணம் போய்க்கொண்டே யிருந்தான்.

அந்தக்காலம் மதமூடநம்பிக்கை பெரும்பாலான இடங்களில் செங்கோலோச்சிய காலமாகும். குருமார்களுக்குப் படிந்து நடந்து, கோயிலுக்கு இடைவிடாமல் சென்றுவருபவர்கள், எவ்வளவு பெரிய குற்றமிழைத்த குற்றவாளிகளாக இருந்தபோதிலும், அவர்கள் குற்றவாளிகளாகக் கருதப்படுவதில்லை ; நாணயமானவர்களாகவே கருதப்பட்டனர். அந்தச் செயல்களைச் செய்யாதவர்கள் எவ்வளவு நாணயமாக நடந்தபோதிலும், அவர்கள் குற்றவாளிகளாகவேக் கருதப்பட்டனர். விடுதலை வேட்கையுணர்வு வெற்றிபெற்று, கிருத்தவமதம் மென்மையானதாகவும், பரந்த நோக்கமுடையதாகவும் ஆக்

கப்படும் காலம் வரையில், கிருத்தவ நாடுகளில்,மதமாறு பாடுடையவர்களாக வாழ்வதைக் காட்டிலும். கொலை காரர்களாகவும், திருடர்களாகவும் வாழ்வது எவ்வளவோ பாதுகாப்பான வாழ்வாகும். திருடனும் கொலைகாரனும், பொன்னையும், புகழ்பாடுதலையும் செலுத்தி மன்னிப்பையும் பாதுகாப்பையும் எளிதில் பெற்றுவிடலாம் குருமார்களிடமிருந்து. ஆனால், மதக் கருத்தில் மாறுபட்டவன், தூயவாழ்வையும், நாணயமான பேச்சையும் கொண்டிருந்தாலும், அவனுக்கு அளிக்கப்பட்ட பரிசுகள் சிரம்வெட்டுக்களமும், சித்ர வதை மரமுமேயாகும்.

இறுதியாக புரூனோ, இத்தாலியையும் சுவிட்ஜர் லாந்தையும் இடையே நின்று பிரித்துக் காட்டும் மலைகளின் வெள்ளிய முகடுகளைக் கண்டான். அந்த நாட்களில் சுவிட்ஜர்லாந்து கத்தோலிக்க போப்பின் ஆதிக்கத்துக்கு அடங்க மறுத்து. பிராட்டெஸ்டண்ட் மதத்தைப் பெரும்வகையில் தழுவிநின்றது, அங்கு பிராட்டெஸ்டண்ட் சீர்திருத்தக்காரர்களுக்கு மதிப்பும் பாது காப்பும் அளிக்கப்பட்டிருந்தன. மலையைத் தாண்டி அப்பால் சென்றால், தான் உரிமையோடு உலாவலாம், மதவிசாரணைக் குழுவின் கொடிய பிடி தன்னைத் தாக்காது என்று புரூனோ கருதினான். அறிவியல் வளர்ச்சியைத் தடுப்பதும், பகுத்தறிவு முயற்சியை ஒடுக்குவதும் கிருத்தவ மதத்தின் எல்லாப் பிரிவுகளுக்குமே உகந்ததொரு கொள்கை என்பதை ஜியார்டனோ அதுவரையில் அறியாமலேயிருந்தான். கண்குருடானவன் பார்க்கிறான் என்பது எவ்வளவு அருமையானதோ, அவ்வளவு அருமைவாய்ந்ததாகும் பகுத்தறிவு வாதியின் கருத்துக்களைக் கிருத்தவன் மதிப்பது என்பதும்.

புரூனோ செயின்ட் பெர்னார்டு என்ற மலைமீது ஏறி அதன் உச்சியை அடைந்தான். அப்பொழுது கதிர

வனும் மேற்றிசையில் மறையும் நிலையில் இருந்தான். அங்கு நின்று, மாலை வெய்யலில், தன் தாயகமான இத்தாலியை ஒரு முறை திரும்பிப்பார்த்தான். வெட்ட வெளியும், நிலபுலங்களும் பளபளப்பான இனிய காட்சியைத் தந்தன. தாயகத்தை விட்டு அகல்கிறோமே என்ற எண்ணம், அவன் கண்களில் தாரை தாரையாக நீர்த் துளிகளை வருவித்தது. "ஓ! இத்தாலி! இத்தாலி! என் அன்பு நாடே! என் அழகு நாடே!! கிருத்தவத்தால், மனிதர்களிலிருந்து, பேய்களாக மாற்றப்பட்டிருக்கும் குரு'மார்களை விட்டு நான் ஓடிப்போகிறேன், நான் உன்னிடம் திரும்பி வருவேனா? உன்னிடத்தில் வாழ்வேனா? எனக்கு இடம் அளிப்பாயா? பாதுகாப்புத் தருவாயா? அல்லது எனக்கு கல்லறை மட்டுமே வைத்திருப்பாயா?" என்று புருனோ அவனை அறியாமலே கதறிவிட்டான்.

பிறகு அங்கிருந்து திரும்பி வடக்கு நோக்கிச் செல்லும் வழியில் இறங்கிப் போய்க்கொண்டே இருந்தான். அது செயின்ட் பெர்னார்டு என்ற மடத்துச் சத்திரம் ஒன்றிடம் கொண்டுபோய் விட்டது. அங்கிருப்பவர்கள் அறியாமல் யாரும் அந்த வழியே சென்றுவிடமுடியாது. புருனோயார் கண்ணிலும் படக்கூடாது என்று இருட்டில் நடந்தான் நாயொன்று குரைத்து அவன் வரவைத் தெரிவித்தது. யார் அந்த வழியாகப் போனாலும் அந்த மடத்துச் சத்திரத்தில் தங்கிவிட்டுப் போவது வழக்கம். தான் அங்குப் போகாமல் போனால் தன்னைப்பற்றி ஐயங் கொள்வார்கள் என்று கருதி, புருனோ மடத்துச் சத்திரத்தில் நுழைந்தான். அங்கேயே தங்கியிருக்க அவன் எண்ணங்கொள்ளவில்லை. தங்கினால் தன்னுடைய உடையிலிருந்து தன்னை யார் என்று அச்சத்திரத்திலுள்ளவர்கள் அறிந்துகொள்வார்கள் என்றும், தன்னிடம் அவர்கள் கேள்விகள் கெட்க முயன்றால், தான் யார் என்பதைச் சொல்லிவிட வேண்டிவரும் என்றும் எண்ணி, அவன் அங்கு தங்குவதற்கு அஞ்சினான். அப்

பொழுது இரவு வேளையாக இருந்ததால், அவனை யாரும் அவ்வளவு தெளிவாக அடையாளங் கண்டு கொள்ளமுடியவில்லை. யாரோ வழிப்போக்கன் என்ற நிலையிலேயே கருதியிருந்துவிட்டனர். புரூனே சிறிது ரொட்டித் துண்டும், கொஞ்சம் ஒயினும் சாப்பிட்டு விட்டு, தான் அவசரமாகப் போகவேண்டிய குறிப்பைத் தெரிவித்துவிட்டு, மேற் கொண்டு நடக்க ஆரம்பித் தான். நான்கு அல்லது ஐந்து நாய்கள் அவனைச் சுற்றி வளைத்துக்கொண்டு, அவன்கூட குரைத்துக் கொண்டே சென்றன. சிறிது தொலைவு சென்றவுடன் அவைகள் திரும்பிவிட்டன. புரூனே செங்குத்தான சரிவில் கீழ் நோக்கி இறங்கிச் செல்லவேண்டியிருந்தது. கீழ்நோக்கி இறங்கி இறங்கி இறுதியாக செயின்ட் பையெர்ரே என்ற இடத்தைச் சேர்ந்தான். அன்று இரவுப் பொழுதை அங்கு கழித்தான். மடத்தை விட்டதற்குப் பிறகு அங்கு தான், அச்சமின்றி, அவனல் அமைதியாகத் தூங்க முடிந்தது.

மறுநாள் எழுந்தவுடன் புதுமுறுக்கோடும், ஊக் கத்தோடும் தன் பயணத்தைத் தொடங்கினன். அவன் சென்ற வழி மேலும் மேலும் கீழ்நோக்கிச் சரிந்து போய்க்கொண்டே யிருந்தது. பிளாங்க் மலை, லெமான் ஏரி ஆகியவற்றைக்கடந்து இறுதியில் ஜெனிவாவின் கோட்டைச் சுவர்கள் அருகே வந்து சேர்ந்தான். அவன் புறப்பட்டு வரும்போது, இந்த இடத்துக்குப் போய்ச் சேருவோம் என்ற எண்ணமிட்டபடிதான் வந்தான். அச்சம் ஏதுமின்றி அந்த நகருக்குள் பெருமித உணர் வோடு நுழைந்தான்.

கால்வின், பேஜா போன்ற சீர்திருத்தக்காரர்கள் தோன்றி, பேரும் புகழும் பெற்ற இடம் அதுதான். கால்வின் அப்பொழுது இறந்துவிட்டார். கால்வின் 1564-ல் இறந்தார்; ஜியார்டனே ஜெனிவா போய்ச்

சேர்ந்தது 1580–ல் ஆகும். கால்வினுடைய கொள்கைகள் ஜெனிவாவில் தலைதூக்கி நின்றன. ஜியார்டானே போப்பாண்டவரை எதிர்த்த வீரன் என்ற முறையில் ஜெனிவாவிலுள்ள சீர்திருத்தக்காரர்கள் அவனை வரவேற்றார்கள். புருனே இளைஞன் என்ற நிலைமையிலிருந்து மாறி பலராலும் மதிக்கத்தக்க மனிதர் ஆனார். அப்பொழுது அவருக்கு வயது முப்பது இருக்கும் புருனே ரோமின் விலங்குகளை மட்டுமல்லாமல், கிருத்துவமதத்தின் விலங்குகளையே உடைக்கக் கிளம்பியவர் என்பதை ஜெனிவா மக்கள் அறியவில்லை. ரோமின் கொள்கையால் எப்படி புருனேவின் உள்ளத்தைத் தன்பால் ஈர்க்க இயலவில்லையோ, அதைவிட இயலவில்லை கால்வினின் கொள்கையால். புருனேவால் சிறிது காலந்தான் ஒய்வாகவும், அமைதியாகவும் காலங்கழிக்க முடிந்தது. பிறகு பலரோடும் வாக்குவாதமும், சண்டையும், சச்சரவும்போட ஆரம்பித்தார் புருனே அரிஸ்டாடிலின் தத்துவத்தை எதிர்த்து அதிலுள்ள குறைபாடுகளை விளக்கினார். கத்தோலிக்கக் கோவில்களில் அரிஸ்டாடிலின் தத்துவம் எவ்வளவு சிறப்பாகவும், ஆதாரமாகவும் போற்றப்பட்டு வந்ததோ, அந்த அளவுக்கே ஜெனிவாவிலும் போற்றப்பட்டது. தர்க்கத் துறையிலும் சரி அல்லது வேறு எந்தக் கல்வித்துறையிலும் சரி அரிஸ்டாடிலின் கொள்கைகளை மீறி யாரும், எப்போதும் தங்கள் விருப்பப்படி போகக்கூடாது என்று ஜெனிவாவில் சட்டங்கூட இயற்றி வைத்திருந்தனர்.

அத்தகைய கட்டுப்பாடான அடக்குமுறைச் சட்டத்தின் கீழ் வாழ, புருனேவுக்குச் சற்றும் பிடிக்கவில்லை. அறிவிலும், ஆராய்ச்சியிலும் மேலோங்கிச் செல்லவேண்டும் என்று வேட்கையுற்றுத் திரிகிற அவருக்கு ஜெனிவாவும் ஒரு கத்தோலிக்க மடம் போலவே காணப்பட்டது. இதற்குள் பல மதவாதி

களின் தீய பார்வை புரூனேவின்மேல் விழுந்தது; பல கடுஞ்சொற்கள் அவர்மேல் வீசப்பட்டன. ஜெனிவாவிலுள்ள பிராட்டெஸ்டண்டுகள் ரோம் கொள்கையிலிருந்து மாறுபட தங்களுக்கு உரிமை உண்டு என்றும், அதே நேரத்தில் தங்கள் கொள்கையிலிருந்து மாறுபட யாருக்கும் உரிமையில்லை என்றும் வாதிட்டு நின்றது முதலில் புரூனேவுக்கு வியப்பைத் தந்தது; பிறகு வெறுப்பைத் தந்தது. மதக்கருத்திலே மாறுபட்டான் என்ற காரணத்துக்காக அதற்குச் சுமார் இருபத்தேழு ஆண்டுகளுக்குமுன் செர்வெடெஸ் என்பானை கால்வின் ஜெனிவா நகரில் தீயில் போட்டுப் பொசுக்கிக்கொன்ருர். அந்தச் செய்தி புரூனேவுக்குச் சிலரால் நினைவுறுத்தப்பட்டது. இத்தாலியில் ஏற்பட்ட நிலைமை சுவிட்ஜர்லாந்திலும் நிலைபெற்றிருப்பதைக் கண்ட புரூனே, அதைவிட்டு வெளியேறிவிட முடிவு செய்தார்.

ஜெனிவா நகரின் சுவரைச் சேர்ந்த வீடு ஒன்றில் வாழ்ந்தவர், புரூனேவுக்குத் தங்குமிடம் அளித்திருந்தார். ஒரு நாள் இரவு எங்கும் இருள் சூழ்ந்திருந்தபோது, புரூனேயாருக்கும் தெரியாமல், சாளரத்திலே கயிறு ஒன்றினைக்கட்டி வெளிப்பக்கமாகக் தொங்கவிட்டு, அதைப் பிடித்துக்கொண்டு கீழே இறங்கி பிரான்ஸ் நாடு நோக்கி விரைந்தேகினர். மதத்தால் புறக்கணிக்கப்பட்டவரும், மத விசாரணைக்குழுவால் தேடப்பட்டவருமான புரூனே மெல்ல லியான்ஸ் நகரைப் போய்ச் சேர்ந்தார்.

புரூனே லியான்ஸ் நகரில் தங்கியிருந்தது பற்றி விரிவாகவும், விளக்கமாகவும் ஒன்றும் தெரியவில்லை. அந்த நாட்களில் லியான்ஸ் நகரில் அச்சுத் தொழில் நடைபெற்றது. ஏராளமான புத்தகங்கள் அங்கு அச்சியற்றப் பெற்று, ஐரோப்பா முழுவதும் பரப்பப்பட்

டன. அச்சுப்பொறி எப்படி வேலை செய்கிறது என்பதைக் கண்டறிந்து மகிழ்ச்சியுறும் பொருட்டு அவர் லியான்ஸ் போயிருந்தாலும் போயிருக்கக்கூடும். ஆனால், லியான்ஸ் நகரில் அவர் நீண்ட நாட்கள் தங்கவில்லை என்பதுமட்டும் தெரிகிறது. அங்கிருந்து டூலவ்ஸ் என்ற ஊருக்குச் சென்றார். டூலவ்ஸில் புருனோ தங்குவதற்கு ஏற்றவாறு பாதுகாப்பு இடம் கிடைக்கவில்லை. ஏனென்றால் டூலவ்ஸ் மதநம்பிக்கையில் அவ்வளவு ஆழமாக ஊறிப் போய்க் கிடந்தது மத எதிரி என்று சொல்லப் பட்டு, நாலாப்பக்கங்களிலிருந்துப் அவருக்குப் எதிர்ப்புகள் கிளம்பின. அதே ஊரில்தான் அப்போதைக்கு முப்பத்தாறு ஆண்டுகளுக்குப் பின்பு புருனோவுக்கு நெருங்கிய நண்பரான வானினி என்பார், மத எதிரி என்ற குற்றஞ் சாட்டப்பட்டுத் தீயிலிட்டுப் பொசுக்கப்பட்டார். போப்பை ஆதரிக்கும் கத்தோலிக்க நெறியினரும், ஹியூஜ்னட் என்ற பிராட்டெஸ்டண்டு நெறியினரும் மத மாற்சரியத்தோடும், மதவெறியோடும் ஒருவரோடொருவர் போரிட்டுக்கொண்டனர். கத்தோலிக்கர்கள் ஹியூஜ்னட்களுடைய கோயில்களைச் சூறையாடினர்; அதேபோல் ஹியூஜனட்களும் கத்தோலிக்கக் கோயில்களைக் கொள்ளையடித்தார்கள். நாட்டிலும் நகரங்களிலும் குருதி வெள்ளம் 'ஏசுபெருமான்' பெயரால் பெருக்கெடுத்தோடிற்று. மதவெறி குடும்பத்துக்குள்ளேயே குழப்பத்தை உண்டாக்கிற்று; பொதுமக்களிடையே நிலவி வந்த நட்புத்தன்மையைக் கெடுத்தன. இப்படிப்பட்ட மதப்போர் நிகழ்ந்துகொண்டிருக்கும் போதுதான், புருனோ பிரான்ஸில் நுழைந்தான், மதம் கிருத்தவ நாட்டை எந்த அளவுக்கு அலக்கழிக்கிறது என்பதையும், கத்தோலிக்கர்களும் பிராட்டெஸ்டண்டுகளும் அவரவர்களின் கடவுள்களின் புகழை வளர்க்க, எந்த அளவுக்குக் கொள்ளையும், கொலையும் செய்கிறார்கள் என்பதையும் புருனோ நேரில் கண்டறிந்து கொண்டார்.

1582-ம் ஆண்டு, நீண்ட நாட்களாகக் காண வேண்டுமென்று ஆவலோடு எதிர்பார்த்திருந்த பாரிஸ் நகரம் சென்றடைந்தார் புரூனே. அங்கு தமக்கு வரவேற்பு கிடைக்கும் என்றும், தாம் தங்க நல்லதொரு பாதுகாப்பு ஏற்படும் என்றும் புரூனே எதிர்பார்த்தார். பாரிஸ் நகரில் சோர்போர்ன் மடாலயம் கொடுமைகளின் கூடமாகவும், புதியகருத்தின் எதிர்ப்பிடமாகவும் காட்சியளித்தது. ஆனால் அதற்கு நேர்மாறுபட்ட கொள்கையுடன் பிரான்ஸ் அரசியலார் கல்லூரி திகழ்ந்தது. அரசியலார் கல்லூரி அறிவியல் உணர்ச்சிக்கு ஊக்கம் கொடுத்து, புதிய அறிவொளியை வரவேற்று நின்றது. சிந்தனைச் சிற்பியான புரூனேவுக்கு அந்தக் கல்லூரி ஏற்ற இடமாக இருந்தது. சோர்போன் மடாலயம் கொண்டிருந்த அரிஸ்டாடிலின் கொள்கை வன்மையாக எதிர்த்துநிற்கும் ஆற்றல் புரூனேவிடம் நிரம்பிக்கிடந்தது. புரூனே, பொதுமக்களுக்குத் தத்துவக்கருத்துக்களைக் கற்பிக்கத் தாம் விரும்புவதாகவும், அதற்கு அனுமதியளிக்கவேண்டும் என்று கோரி அரசியலாரிடம் விண்ணப்பம் செய்திருந்தார். அவரின் விருப்பத்திற்கு அரசியலாரும் இசைந்தார்கள். சிறிது நாட்களில் புரூனேவின் அறிவாற்றல் பாரிஸ் மக்களுக்குப் புலப்பட்டது. ஏராளமான மாணுக்கர்கள் அவரைப் புடைசூழ்ந்து கொண்டனர். அவரது புலமையின் செறிவையும் சொற்பொழிவாற்றும் திறமையையும் கண்டு பலரும் பாராட்டுவராயினர். புரூனே சுவைபயக்காத தத்துவத்துறையைச் சுவை பெறச்செய்தார்; கடுமையான கல்வி முறையை எளிமையாக்கினுர். புரூனேவின் பெயரும், புகழும் பாரிஸ் நகரம் முழுவதும் பரவிக் கமழ்ந்தன.

அப்பொழுது மூன்ருவது ஹென்றி பிரான்ஸை அரசு செலுத்தி வந்தான். அவன் புரூனேவுக்கு அழைப்பு விடுத்துத், தன் நாளவையில் வந்து காணுமாறு சொல்லினுன். மடாலயத்தின் அறையில் கட்டுப்

பட்டுக் கிடந்த புருனோ, இப்பொழுது மன்னனின் அவைக்களத்திலே பெருமிதத்தோடு நிற்கும் நிலைபெற்றார்! வேத மந்திரங்கள் ஓதுவதிலே காலங் கழிக்க வேண்டியிருந்த நிலை மாறி, அறிவுப் போர் புரிந்து வெற்றிகண்டு அகமகிழும் நிலை ஏற்பட்டது! புருனோவுக்கு அரண்மனையிலே இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஒரு நாள் அரசன் ஹென்றி புருனோவின் அறையில் நுழைந்து, "ஜியார்டனோ! நான் உங்களுக்கு நல்ல செய்தியொன்று கொண்டுவந்துள்ளேன். பல்கலைக் கழகத்தில் தத்துவப் பேராசிரியர் வேலை காலியாக இருக்கிறது. பாரிஸ் நகரத்தைக கலக்கவிட்டிருக்கும் திறமை படைத்த புருனோவைத் தவிர, வேறு யாரும், அந்த இடத்திற்குத் தகுந்தவர்களல்லர் என்று பல்கலைக் கழகத்தார் கூறுகிறார்கள்" என்று மகிழ்ச்சி கொண்ட தோற்றத்தோடு கூறினார். புருனோ அரசனைக் கண்டதும் அஞ்சி எழுந்து நின்று, இந்தச் செய்தியைக் கேட்டதும், அவனையறியாமலே வியப்புணர்ச்சி பெற்று, மகிழ்ச்சியோடும் மலர்ச்சியோடும் நின்றான். "ஐயா! பேராசிரியர் பதவி! பாரிஸ் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் பதவி! இந்தப் பதவி நீண்ட நாட்களுக்குப் பிறகே எனக்குக் கிடைக்க முடியும் என்று கனவு கண்டுகொண்டிருந்தேன். ஆனால் நான் மிக இளைஞன்; மிகத் தெரியாதவன்..." என்று புருனோ சொல்லிக் கொண்டிருக்கும்போதே அரசன் இடைமறுத்து, "இல்லை! இல்லை! பாரிஸ் நகரத்து இளைஞர்களை உங்களை விட வேறு யாரால் ஈர்க்கமுடியும்? அல்லது துடிப்புடைய இளைஞர்களை உங்களைத் தவிர வேறு யாரால் கட்டுப்படுத்த முடியும்? இதை மிகச் சாதாரணமானது என்று நினைக்கவேண்டாம்! ஜியார்டனோ! மறுக்க வேண்டாம்! என்னுடைய தாயின் நாட்டைச் சேர்ந்த ஒருவர், அதுவும் எல்லாத் தகுதியும ஒருசேரப் பெற்ற ஒருவர், அந்தப் பதவியை வகிக்கவேண்டும் என்பதுதான், என்னுடைய பெருவிருப்பம்" என்று கூறினான்.

"ஐயா! நான் ஒப்புக்கொள்ள வேண்டியதைத் தவிர வேறு எதுவும் சொல்வதற்கில்லை என்று கருது கிறேன். நீண்ட அலைச்சலுக்குப் பிறகு எனக்கு ஓய்வும், அமைதியும் ஏற்படும் என்று நினைக்கிறேன். அன்பும் நட்பும் உடைய அரசே! என்னுடைய கடமைகள் எப் பொழுது ஆரம்பமாகும்?" என்று நன்றியும் நம்பிக்கை யும் கலந்த ஒலியில் கேட்டார் புரூனோ.

"ஓ! ஆரம்பம்? இப்பொழுதேதான்! கட்டளைக ளில் கையெழுத்திடுதல் போன்ற சில சடங்குகள் முன் கூட்டி நடந்தேறியாக வேண்டும் அவ்வளவுதான்! இப்பொழுதே ஒன்று சொல்லவேண்டும் என்று நினைத் தேன். ஜியார்டனோ! நீங்கள் மதக்கடமைகள் பற்றிக் கவலையற்றிருக்கிறீர்கள்! கடவுள் வழிபாட்டின்போது உங்களைக் கண்டதாக எனக்கு நினைவு இல்லை. என் அருமைப் பேராசிரியாரே! கடவுள் வழிபாடு செய்ய வேண்டியது உங்களுடைய புதிய பதவியின் கடமை களுள் ஒன்று என்பதை மறந்துவிட வேண்டாம்" என்று வேந்தன் மறுமொழி பகர்ந்தான்.

புரூனோ உடனே திடுக்கிட்டுப்போனார்; அவரு டைய ஒளி வீசிக்கொண்டிருந்த முகம் புகை படர்ந் தது; கறுத்தது.

"அரசே! நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என் பது எனக்குத் தெளிவாகத் தெரியவேண்டுமே! பேரா சிரியர் என்ற முறையில், நான் கடவுள் வழிபாடு செய்யவேண்டுமா?" என்று புரூனோ ஐயப்பாட்டோடு கேட்டார்.

"ஆமாம் உறுதியாகச் செய்ய வேண்டும்! நீங்கள் பேராசிரியராக இருந்துகொண்டு. பல்கலைக் கழகத்தில் மதமற்றத் தன்மைக்கு ஒரு எடுத்துக் காட்டாக இருக்

கக்கூடாதல்லவா? ஓ! அதனால் நேரம் ஒன்றும் மிக வாகச் செலவழிக்க வேண்டிவராது. அதுபற்றி நான் உறுதி சொல்கிறேன் மனிதர்களிலே மிகவும் சுறுசுறுப் புப் படைத்தவர்களாக இருக்கும் நீங்கள், அவ்வளவு குறைந்த அளவு நேரம் செலவழிக்கப்படுவதற்காக வருத்தப்படவேண்டிய இன்றியமையாமை இல்லை" என்று அரசன் புருனோவின் குரலிலும், முகத்திலும் ஏற்பட்ட மாறுபாட்டைக் கவனிக்காமல் கூறினான்.

புருனோவின் இதயம் படபடவென்று துடித்துக் கொண்டிருந்ததால், சாளரத்தின் பக்கம் திருப்பி, அதன் அருகே சென்று நின்றுகொண்டு, எதையோ வெளியில் உற்றுப் பார்த்துக்கொண்டு சிந்தித்த வண்ணமிருந்தார். 'பேராசிரியர் பதவி நிலையான இடத்தையும், போது மான வருவாயையும் தருவதுதான; ஆனால், எதற்காகக் கடவுள் வழிபாடு? கடவுள் வழிபாடு என்பதுதான் என்ன? ஒரு சில முட்டாள்தனமான சொற்களால் ஆன பொருளற்றச் சொற்றொடர்கள்தாமே? இவற்றி லெல்லாம் நம்பிக்கை இருக்கிறது என்று பாசாங்கு செய்யவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? நாம் தனியாக இருந்துகொண்டு, அமைதியாகத் தத்துவக் கருத்துக்களைப்பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருக் கலாமே; தாம அந்தப் பேராசிரியர் பதவியை ஏற்றுக் கொள்ள மறுத்தால், நிலையில்லாத கொடுங்கோன்மை யுடைய அரசன் தம்மை எதிர்த்துக் கிளம்புவான்; இத்தாலியிலிருந்தும் சுவிட்ஜர்லாந்திலிருந்தும், லியான்ஸி லிருந்தும் டூலவ்ஸிலிருந்தும் துரத்தப்பட்டதுபோல, பாரிஸிலிருந்தும் துரத்தப்படும் நிலைமை ஏற்படும்; கடவுள் வழிபாடு; ஒரே பொய்! என்றவாறெல்லாம் மனதில் எண்ணிக் கொண்டு விரிந்த முகத்தோடும் ஒளி வீசும் கண்களோடும் அரசன் பக்கம் திருப்பினார். அர சன் வியப்புணர்ச்சியோடு அவரைப் பார்த்துக்கொண் டிருந்தான்.

"ஐயா! இத்தாலியிலிருந்து ஓடிவந்தவனிடம் நீங்கள் நல்லவிதமாகவே நடந்துகொள்கிறீர்கள். நீங்கள் என்னைப் பெருமைப்படுத்திக்கொடுக்கிற பரிசோடு விதிக்கப்படுகிற நிபந்தனையை, நான் ஏற்றுக்கொள்ள முடியாமலிருப்பதற்குத், தாங்கள் சினங்கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்" என்று புருனே அடக்கமாகக் கூறினார்.

"நிபந்தனையா? என்ன நிபந்தனை?" என்று அரசன் கேட்டான்.

"ஐயா! கடவுள் வழிபாட்டிலே கலந்து கொள்ள வேண்டும் என்பது" என்று புருனே விடையிறுத்தார்.

"புருனே! அது அறியாமை! வழிபாட்டின் கால அளவு மிகக் குறுகியது என்பதைத்தான் நான் முன்பே சொல்லிவிட்டேனே! நீங்கள் மதக் கடமைகளில் எவ்வளவு அசட்டையாக இருந்தபோதிலும், கடவுள் வழிபாட்டில் கலந்துகொள்வதை எந்த 'நல்ல கத்தோலிக்கனும் மறுக்கக்கூடாது" என்று மன்னன் சமாதானம் கூறினான்.

"ஆனால், ஐயா! நான் ஒரு கத்தோலிக்கனல்லவே! நான் என மனச்சான்றுபடி, நாணயமாகக் கடவுள் வழிபாட்டில் கலந்துகொள்ள முடியாதே!" என்று புருனே சொல்லிக் கொண்டே போகும்போது, அரசன் திடுக்கிட்டு, அஞ்சிப் பின்னால் நகர்ந்தான். அப்பொழுது, புருனே 'நில்லுங்கள்! நான் மனமறிந்து உங்களை ஏமாற்ற விரும்பவில்லை. என்னுடைய விரிவுரைகளெல்லாம் தத்துவக்கலையைப்பற்றி இருக்குமேயொழிய, மத வேதாந்தத்தைப்பற்றியதாக இரா. என்னுடைய சொந்த நம்பிக்கையைப் பொறுத்துக் கேள்வி எழ வேண்டிய அவசியம் அங்கு ஏற்படவில்லை. நீண்ட

காலத்திற்கு முன்பே நான் பக்தியைப் பற்றி ஐயங் கொள்ள ஆரம்பித்துவிட்டேன். நான் 1572-ம் ஆண்டில் பாதிரியராக மாறினேன். ஆனால் என்னுடைய படிப்பு என்னுடைய பக்தியைக் கலகலக்கச் செய்து விட்டது'' என்று புருனே சொல்லிக்கொண்டே போனார். அதனால் தாம் சொல்வதை அரசன் சரியாகக் காது கொடுத்துக் கேட்கவில்லை என்பதைத் தெரிந்து கொண்டு, அந்த அளவோடு தம் பேச்சை நிறுத்திக் கொண்டார். அரசனின் முகம் கறுகறுத்துவிட்டது; அவன் அறையில் மேலும் கீழுமாய் நடந்துகொண்டிருந்தான். இறுதியாக நடப்பதை நிறுத்திவிட்டு, புருனேவை நிமிர்ந்து பார்த்தான்.

"நான் உர்மைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும், அல்லவா? நீர் ஒரு கத்தோலிக்கர் அல்லர் என்பதை நான் அறிந்துகொள்ளவேண்டும் அல்லவா? நீர் புனிதச் சர்ச்சின் மேம்பாட்டை உதறித் தள்ளி விட்டீர்! நீர் ஒரு மத எதிரியாகவோ, ஒரு லூதரனாகவோ அல்லது ஒரு கால்வினிஸ்டாகவோ; அல்லது ஒரு ஹியூஜ்னட் பைத்தியக்காரனாகவோ இருக்கிறீர்!'' என்று அரசன் சினம்பொங்கிய குரலில் கேட்டான்.

"நான் ஒரு கத்தோலிக்கனுமல்ல; அல்லது லூதரைச் சேர்ந்தவனுமல்ல; அல்லது கால்வினைச் சார்ந்தவனுமல்ல; அல்லது எந்த ஒரு ஹியூஜ்னட் பிராட்டஸ்டெண்டுகளைச் சேர்ந்தவனுமல்ல. நான் ஒரு தத்துவக்கலைஞன்; அறிவியல் வாதி; இப்பொழுதுள்ள மதப்பிரிவுகள் எதனோடும் என்னுடைய எண்ணங்களும், கொள்கைகளும் ஒத்துவருவதில்லை'' என்று புருனே தெளிவுபடக் கூறினார்.

பிறகு சிறிதுநேரம் அமைதி நிலவியது. புருனேவின் வீரம்பேசும் முகத்தையும், உண்மைபேசும் கண்களையும்

கண்ட அரசன் மனம் இளகிவிட்டான். தன்னுடைய கைகளை நீட்டி புரூனேவின் கைகளைப் பிடித்துக் கொண்டு, அவரைப் பரிவோடு பார்த்தான்.

"இளம் வீரரே! நீர் உம்முடைய உயிரைக் காப்பாற்றிக்கொள்ள விரும்பினல், மதத்திற்கு மாறுபட்ட கருத்தை வெளியிடாமல், அமைதியாக வாய்திறவாமல் இரும். புனித சர்ச், மத நம்பிக்கையற்றவனின் வாதங்களை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. கடவுள் வழிபாட்டில் கலந்துகொள்வதான சுமையோடுகூடிய, பேராசிரியர் பதவியைவிடக், கடுமையானவைகள் தாம் மற்றப்பதவிகளெல்லாம். பரிசுத்த மேரி உமக்கு நல்ல உள்ளத்தை அளிக்கவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன். ஆனல், சோர்போன் மடாலயத்திலுள்ள கற்றறிஞரெல்லாம், உமது பக்தியற்ற போக்கை அறிந்துவிட்டால், என்னுடைய ஆதரவுகூட உமக்குப் பாதுகாப்பு அளிக்கமுடியாமற் போய்விடும்" என்று அரசன் மனவருத்தத்தோடு கூறினன்.

அரசன் போனவுடன், ஜியார்டனே தலையைக் கவிழ்த்துக்கொண்டு, ஆழ்ந்த சிந்தனையில் அப்படியே உட்கார்ந்துவிட்டார். அவர் முகத்திலே வாட்டம் ஏற்பட்டது; கவலை நெற்றியிலே பல கோடுகளைக் கிழித்தது. மறுபடியும் ஓடிப்போக வேண்டியவனகவும், நாடோடியாகத் திரியவேண்டியவனகவும் மாறத்தான் வேண்டுமோ என்று எண்ணினர். கிறித்தவ மதத்தின் மூட நம்பிக்கையிலிருந்து விடுபட்டவனுக்கு, வாழ்வும், அமைதியும் ஒருபொழுதும் கிடையாதா, என்று சிந்தனை செய்தார்.

1583-ஆம் ஆண்டில் புரூனே வடக்குநோக்கி இங்கிலாந்துக்குப் புறப்பட்டார். அப்பொழுது இங்கிலாந்தில் எலிசபெத் அரசியாக வீற்றிருந்தாள். எலிசபெத்தின்

அரசவையில் பிரெஞ்சு நாட்டின் தூதுவனாக இருந்த மைக்கேல் டி காஸ்டெல்னு என்பானுக்கு, பிரெஞ்சு மன்னன் ஹென்றியிடமிருந்து, அறிமுகக்கடிதம் ஒன்றைப் பெற்றுகொண்டு, புரூனோ இங்கிலாந்து சென்றார்.

இங்கிலாந்தின் அரசவைக்களத்தில் இருந்தவர்களிலே சர் பிலிப் சிட்னி என்பார். புரூனோவுக்கு நெருங்கிய நண்பரானார். சிட்னியின் ஆண்மைத் திறத்தையும் அன்புபாராட்டும் திறத்தையும் புரூனோ பாராட்டிப் போற்றினர். எலிசபெத் ராணி பிராட்டெஸ்டண்டு மதத்தைச் சேர்ந்தவளாக இருந்தபோதிலும், அவளுடைய அறிவு ஆற்றல், திறமை ஆகியவற்றைப் புரூனோ பலபடப் பாராட்டிப் புகழ்ந்தார். பின்னல் மத விசாரணைக் குழுவின் வேட்டை நாய்கள் புரூனோவின் மீது குற்றஞ் சுமத்தும் போது, அவர் எலிசபெத் அரசியாரைப் பாராட்டியதை குற்றங்களில் ஒன்றாகக் குறிப்பிட்டனர்.

எலிசபெத் அரசியாரைப்பற்றிச் சொல்லும்போது, "அவள் காலத்திலே அவளுக்கு ஒப்பான கண்ணியமுடையவன் எவனுமில்லை; அவளைப்போலறிந்த வழக்கறிஞனும் இல்லை; அவளைப் போன்ற அரசியலறிஞனும் இல்லை!...உலகம் முழுவதும் ஒளிபரப்பவந்த செஞ்ஞாயிறு போன்று அவள் உயர்ந்தாள். பதவியிலும் சரி, அவள், அந்தக் காலத்தில் வாழ்ந்த உலக அரசர்களில், எவருக்கும் தாழ்ந்தவளல்லள், அறிவுடைமை, எதைப் பற்றியும் முடிவு எடுக்கும் தன்மை, ஆளுவதிலே காட்டும் திறமை ஆகியவற்றில் அவளுக்கு அருகில் வரக்கூடிய அருகதைபெற்ற அரசியார் வேறு யாரும் இல்லை" என்று புகழ்மாலை சூட்டினர். எலிசபெத் போப்பின் ஆதிக்கத்துக்குக் கீழ்ப்படிந்து நடக்க இசையாத காரணத்தால், அவளைப் போப்பாண்டவர் மத விலக்குச் செய்து, மத எதிரி என்ற குறறத்திற்கு உள்ளாக்கியிருந்தார்.

மதத்துறையைத் தவிர்த்து, மற்ற துறைகளில், இங்கிலாந்தும் இத்தாலியும் உடன்பிறந்தாரைப்போல் காணப்பட்டன. இத்தாலியின் மொழி, கலை, இலக்கியம் ஆகியவற்றை அறிந்து கொள்ளவேண்டும் என்ற ஆவல் ஆங்கில மக்களிடத்தில் மிகுந்து காணப்பட்டது. இத்தாலிய இலக்கியங்களும், வரலாறுகளும் ஷேக்ஸ்பிய ரைப் பெரும் அளவுக்குக் கவர்ந்தன. மில்டன் பலமுறை அந்நாட்டைச் சுற்றிப் பார்த்து,. மறுமலர்ச்சி வாழ்வு கண்டு மகிழ்ந்தான். இங்கிலாந்து அரசவையில் இத்தா லிய மணம் கமழ்ந்ததால், அது புரூனேவின் உள்ளத் தைப் பெரிதும் கவர்ந்து நின்றது. புரூனே வாழ்வதற் கேற்ற இடமாகவே அது காணப்பட்டது. புரூனே தம் முடைய தீவிரமான கருத்துக்களை வெளியிடாமல். போப்பின் ஆதிக்கத்தைக் கண்டிக்கிற அளவுக்கும், பிராடெஸ்டண்டைப்போல் காலந்தள்ளுகிற அளவுக்கு வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முற்பட்டிருப்பாரே யானால், அவருடைய வாழ்வுமிக அமைதியாகவும். ஈடேறிப்போயிருந்திருக்கும். ஆனால் புரூனேவால் தம் முடைய கருத்துக்களை வெளியிடாமல் எப்படி இருக்க முடியும்?

1583-ம் ஆண்டு ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் கலைவிழா கொண்டாடப்பட்டது. பற்பல நாட்டினரும் வந்திருந்தனர். சிவப்பு நாடா சட்டியிருந்த கற்றறிஞர் கள் பலர் கலந்து கொண்டனர். நாள்தோறும் இலக் கியச் சொற்போர்கள் நடைபெற்றன. தத்துவக் கருத் துக்களை ஆதரித்தும், எதிர்த்தும் வாக்குவாதங்களும், சொற்போர்களும் நிகழ்ந்தன. சொற்போர்களில் நாக்கு கள் வாள்களாகவும், சொற்கள் சம்மட்டிகளாகவும் பயன்படுத்தப்பட்டன. இறுதிநாளன்று. ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்களோடு, சொற்போர் புரியும் ஆற்றல் பெற்றோர் யாரேனும் உண்டோ என்று அறைகூவப்பட்டது. சொற்போர்புரிய துடித்துக்

கொண்டிருந்த புரூனே, அந்த அறைகூவலைக் கேட்டு அகமகிழ்ந்து, மன்றத்தில் ஏறி நின்றார். வீரம், அழகு, உணர்ச்சி, ஊக்கம் எல்லாஞ் சேர்ந்த பொலிவுடைய தோற்றத்தோடு நின்றார். இத்தாலிய, சுவிட்ஜர்லாந்து, பிரான்சு ஆகிய நாடுகளில் எப்படிப்பட்ட உணர்ச்சியோடு வாக்குவாதம் புரிந்தாரோ, அதே உணர்ச்சியால் உந்தப்பட்டுக் கருத்துக்களை நீர் அருவிபோலக் கொட்ட ஆரம்பித்தார். உலகம் நகருகிறதா? இந்த ஒன்றைத் தவிர வேறு பல உலகங்களும் உண்டா? என்பன போன்ற கேள்விகள் எழுந்தன. "உலகம் அசையாதது; அண்டம் முடிவான ஒன்று; அது நகரக்கூடியது" என்று, அரிஸ்டாடில், தாலமி ஆகியோரின் 'கருத்துக்களை ஒட்டி, பல்கலைக் கழகத்தார் வாதிட்டார்கள். "உலகம் சுழல்கிறது; அண்டம் முடிவடிந்த ஒன்று அல்ல; உலகைப் போன்று வேறுசில கோள்கள் (கிரகங்கள்) உண்டு" என்று, பிலேலாஸ், கோபர்னிகஸ் ஆகியோரின் முடிவுகளை ஒட்டி, புரூனே வாதிட்டு நின்றார். வாதம் மிகப்பெரிய அளவுக்கு வளர்ந்தது. புரூனே காரணகாரியங்கள் காட்டித் தட்கருத்தை தெளிவுபடப் பொறுமையுடன் விளக்கினர். புரூனேவின் கருத்துக்களுக்கு நேருக்குநேர் விடையிறுக்கமாட்டாத மாற்றார்கள், அவரைக் கேலி கிண்டல் செய்வதில் இறங்கினர்கள். புரூனே அவற்றை யெல்லாம் பொருட்படுத்தாமல், உறுதியுடன் நின்று வாதிட்டார்.

புரூனே தன்னிந்தனியாகத்தான் நின்றார், ஆனல் அவர் பக்கம் உண்மை யிருந்ததால் எதிர்த்து வாதிட்டோர் அனைவரும் வாயடைத்துப் போனார்கள். மதத்தைப் புறமுதுகிடச் செய்து, அறிவியலுக்கு வெற்றி வாங்கித்தர அரும்பாடுபட்டார்; இறுதியில் வெற்றிக் களிப்போடு காட்சியளித்தார்.

புரூனே அனுமதி பெற்றுக்கொண்டு, ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில், சில சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

பாரிஸ் நகரத்தில் கூடியதுபோலவே, மக்கள் பெருந்திரளாக அவரது சொற்பொழிவைக் கேட்கக் கூடினர். அவர் தெருவில் நடந்துபோய்க்கொண்டிருந்தால்: மக்கள் "அதோ, நாத்திகன்!" என்று சுட்டிக்காட்டி, முணுமுணுப்பார்கள். அறிவியலுக்குப் பைபிள் ஆதாரமாகாது என்று கூறிய புரூனேவைப், பாதிரியார்கள் கண்டால், அவர் மீது சுடுசொற்களை வீசிப் பாய்ந்து விழுவார்கள். "மத எதிரியும், கடவுள் எதிரியுமான அவன் பேச்சை நீங்கள் கேட்டால், நீங்கள் படு நரகத்திற்குப் போய்ச் சேருவீர்கள், அவனை அண்டாதீர்கள்" என்று இளைஞர்களைப் பார்த்து எச்சரிக்கை செய்வார்கள்.

இறுதியில் இங்கிலாந்திலும், அந்த தத்துவக்கலை அறிஞர் தங்கியிருக்கமுடியாத நிலை ஏற்பட்டது. அவருடைய சிறந்த நண்பர்களான மைக்கேல் டி காஸ்டெல்னுவும் பிலிப் சிட்னியும் வெளிநாடுகளுக்குப் போய்விடும் வாய்ப்பு நேர்ந்தது. அவர்கள் போனவுடன், புரூனேவை ஆதரிப்பதற்கு யாரொருவரும் இல்லாமற்போய்விட்டார்கள். எதிர்ப்புகள் எல்லாப் பக்கங்களிலிருந்தும் வந்தன; அச்சுறுத்தல்கள் அடிக்கடி மிரட்டியவண்ணமிருந்தன. 1586-ம் ஆண்டு புரூனே இங்கிலாந்தை விட்டுப், பிரான்ஸுக்கு ஓடினர். அவர் பாரிஸ் போய்ச் சேர்ந்த மூன்று நாட்களில், விட்சன்டைட் என்ற இடத்தில் ஞாயிறு, உலகம், அண்டம்பற்றி அரிஸ்டாடில் கூறிய கருத்துக்களின் மீது விவாதம் ஏற்பட்டது. இந்த விவாதத்தின் விளைவாக மதவெறியர்கள் புரூனேவை எதிர்த்துக் கிளம்பினர்கள்; அவர் பாரிஸ் நகரத்திலேயே வாழமுடியாத நிலைக்கு எதிர்ப்பு திரண்டெழுந்தது. அரசன் ஹென்றி புரூனேவுக்கு ஆதரவுதர அஞ்சினன்; சோர்போன் மடாலயம் அவரைத் தண்டிக்கப் போகிறோம் என்று அச்சுறுத்தல்களைக் கிளப்பிக்கொண்டிருந்தது. புரூனே விரைவில் வேறிடம் பார்த்துக்கொண்டு ஓட

வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. பல இடங்களைப் பற்றிச் சிந்தித்துக், கடைசியாக, ஹெஸ்ஸே பகுதிக்கு ஓடிவிடலாம் என்று முடிவுசெய்து, அந்த நாடு போய்ச் சேர்ந்தார். அங்குள்ள மார்பர்க் பல்கலைக் கழகத்தில் தமக்கு வேலையும், வாழ்க்கை வசதியும் கிடைக்கும் என்று நம்பி அங்கே சென்றார். முதலில் அங்கிருந்த சூழ்நிலைகள் அவருக்கு உறுதியளிப்பன போலக் காணப் பட்டன. 1586-ம் ஆண்டு ஜூலைத் திங்களில், அந்தப் பல்கலைக்கழகம் அவருக்கு டாக்டர் என்ற பட்டம் வழங்கி, அவரைப் பெருமைப்படுத்திற்று. அந்தப் பல்கலைக் கழகத்திலேயே, தத்துவக்கலை பற்றிப் பயிற்சி யளிக்கத், தமக்கு உரிமை அனுமதிக்கவேண்டும், என்று பல்கலைக் கழகத்தின் தலைமை நிர்வாகியைக் கேட்டுக் கொண்டார்.

தமக்கு விரைவில் அனுமதி கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில், சிறிது காலம் மகிழ்ச்சியோடு காலந் தள்ளிவந்தார், அந்தப் பல்கலைக் கழகத்தில் தம் விருப் பப்படி கல்வி பயிற்றுவிக்கலாம் என்றும், தாம் கண்ட உண்மைகளைச் சொல்லுவதற்கு அதுவே ஏற்ற இட மாக இருக்கும் என்றும், தம்மைத் தடுப்பார் யாரும் அங்கே இருக்கமாட்டார்கள் என்றும் மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தார்.

பட்டு நாடாவால் முடிபோடப்பட்ட தாள் சுருள் ஒன்றை ஏந்திக்கொண்டு, அவர் அனுப்பி வைத்தத் தூதுவன் மீண்டும் வந்து சேர்ந்தான். புருனோ மகிழ்ச்சி யோடும், கவலையற்ற முறையிலும் அதனை வாங்கி, புன்சிரிப்பு உதட்டிலே தவழ, அந்தப் பட்டு நாடாவை அறுத்துச் சுருளை விரித்துப் படித்தார். படிக்கும்போது அவருடைய ஒளி வீசும் முகம், மங்கிற்று; அவருடைய கண்கள் இருட்டின, பல்கலைக்கழகத் தலைமை நிர்வாகி அனுமதி மறுத்து எழுதிவிட்டார்; புருனோ கல்வி கற்பிக்

கக் கூடாது என்பதற்கும் பல ஆழ்ந்த 'காரணங்கள்' இருந்ததால், "அனுமதிதர மறுக்கப்பட்டது என்று சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. புருனோ ஆத்திரப்பட்டு, உடனே எழுந்து, விறுவிறு என்று, தலைமை நிர்வாகி யின் இடம்நோக்கிச் சென்றார். தம் கையிலிருந்த தாள் சுருளை, தலைமை நிர்வாகியின் மேசையின்மீது தூக்கி எறிந்து, " இதில் குறிப்பிடப்பட்டிருக்கும் காரணங்கள் தாம்யாவை?" என்று ஆத்திரத்தோடு கேட்டார். மேலும் படபடப்புடன் சொல்லும் போது, "இந்தப் பல்கலைக்கழகத்தின் டாக்டர் என்று நீர்தான் என்னை ஆக்கினீர்; இந்த டாக்டருக்குக் கல்வி கற்பிக்க உரிமை யில்லை என்று நீரே மறுக்கிறீர்! இந்த வெறும் பட் டத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வது? ஏன் என்னை இப்படி நடத்துகிறீர்கள்?" என்று கேட்டார்.

புருனோவின் கூற்றுகளை அசையாமல் செவி மடுத்த தலைமை நிர்வாகியான பையெர்ரே நிஜிடியஸ் என்பார், புருனோவைப் பார்த்து, "டாக்டர் புருனோ! உம்முடைய கொள்கைகள் எமக்குப் பொருந்தி வருவதாக இல்லை. அப்படிப்பட்ட கருத்துக்கள் ஆசிரியரிடத்தில் இருப்பது நல்லதல்லவாதலால், அவரை விட்டு இளைஞர்களுக்குக் கல்வி கற்பிக்கச் செய்ய எமக்கு விருப்பமில்லை" என்று அமைதியாகக் கூறினார்.

"பொருந்தவில்லை?...நல்லதல்ல?...ஆனால் அவை கள் உண்மையாக இருந்தால்!" என்று புருனோ உரக்கக் கத்திக் கேட்டார்.

"அருமை அன்பரே! உண்மை, கடவுளின் தரத் தால்தான் அளந்து பார்க்கப்படவேண்டும். உலகம் சுழல்கிறது என்ற உம்முடைய கூற்று வேத நூலின் முன் காற்ருய்ப் பறந்து போகிறதே!"

"வேத நூல் அவ்வளவு அறியாமை நிரம்பியது என்பதை அது காட்டுகிறது" என்று, புருனோ, தலைமை நிர்வாகியின் முகம் எப்படிக் கறுக்கிறது என்பதைப் பற்றிக் கவலைப்படாமல், மறுமொழி யிறுத்தார்.

"ஏ! கடவுள் நிந்தகரே! பையெர்ரே நிஜிடி.ஸாகிய நான், இந்தப் பல்கலைக்கழகத்தில் தலைமை நிர்வாகியாக ஆணை செலுத்தும் காலம் வரையில், கல்வி கற்பிக்க எந்த ஒரு கடவுள் எதிரிக்கும் இடமளிக்கமாட்டேன்" என்று பதில் சொன்னார்.

"அப்படியானால், நீர் எனக்கு அளித்த தற்காலிக மானபட்டத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும். கல்வி கற்பிக்க முடியாத ஆசிரியராக இருக்க நான் ஒரு பொழுதும் விரும்பவில்லை. உம்முடைய பல்கலைக்கழகப் பட்டியலிலிருந்து என்னுடைய பெயரை அழித்துவிடும். உம்முடைய கொள்கையைப் போலவே, வெற்றுத்தன்மை கொண்ட உம்முடைய பட்டத்தால் எனக்குப் பெருமையளிக்க வேண்டாம்" என்று மிக்கக் கொதிப்புணர்ச்சியுடன் புருனோ கதறினார்.

"உம்முடைய பெயரை அழித்துவிடுவதில் எமக்கு ஒரு தொல்லையும் கிடையாது. உம்முடைய பெயரால் அந்தப் பட்டியல் மதிப்பற்றுப் போகக்கூடாது என்பது தான் எமது விருப்பமும். இன்று மாலை கதிரவன் சாயுங் காலத்திற்கு முன்பு உம்முடைய பெயர் அழிக்கப்பட்டு விடும். கடவுளை நிந்திக்கும் துராத்மாவே! உம்மை இனி நீரேதாம் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். மார்பர்க், மத எதிரிக்கு, அவன் உள் நாட்டானாயிருந்த போதிலும்சரி, அவன் வெளிநாட்டிலிருந்து வந்தவனானாலும் சரி, ஒரு சிறைக்கூடமாகத்தான் இருக்கும் என்பதை நீர் அறிந்துகொள்ளும்" என்று சினுசினுத்த முகத்தோடு கூறினார் தலைமை நிர்வாகி.

மறுபடியும் புரூனே நாடோடியாகத் திரியும்படி நிலைமை ஏற்பட்டது. விர்டெம்பர்க்கில் தங்குமிடம் தேடியலைந்தார். அங்குள்ள பல்கலைக்கழகத்தில் புரூனேவுக்கு வேலையொன்று கிடைக்கப்பெற்று அதன் பாதுகாப்பில் இரண்டு ஆண்டுக்காலம் வாழ்ந்தார். விர்டெம்பர்க்கில் பேச்சு உரிமையும், இலக்கியப் பற்றும் மலிந்து விளங்கின என்று புரூனேவே குறிப்பிட்டுள்ளார். விர்டெம்பர்க் ஜெர்மன் மக்களுக்கு ஒரு ஏதென்ஸ்போல இருந்து வந்தது என்று சுட்டியுள்ளார். புரூனே விர்டெம்பர்க்கை விட்டு அகலும்போது, விர்டெம்பர்க் பல்கலைக் கழகத்தைப் புகழ்ந்தும், பாராட்டியும் கூறிவிட்டுச் சென்றார்.

"என்னுடைய நம்பிக்கையைப் பொறுத்து நீ எந்தக் கேள்வியும் என்னைக் கேட்கவில்லை! என்னுடைய கொள்கை உனக்குப் பிடித்தமில்லாமலிருந்தும் நீ அவ்வாறு செய்யவில்லை! அருளிலும், அமைதியிலும், அறச்செயலிலும், தத்துவக் கலையிலும் நான் காட்டிவந்த அன்புக்காக, என்னை நீ போற்றிவந்தாய்! கல்வியின் அன்பனாகவும், அறிவின் தோழனாகவும் நான் இருந்து வர நீ என்னை அனுமதித்தாய்! உன்னிடையே பரவியிருந்த கருத்துகளுக்கு மாறுபாடாக இருந்தபோதிலும், என்னுடைய கருத்துக்களை வெளியிடுவதில் நீ தடை ஏதும் கூறவில்லை! தத்துவக்கலையை ஒரு வழியாகவோ, ஒரு முடிபாகவோ நீ ஏற்றுக்கொள்ளவில்லை என்றபொதிலும், உன்னுடைய வெள்ளை யுள்ளமும், பக்தியுணர்ச்சியும், தூய்மை எண்ணமும், பழமைப்போக்கும் பழயகாலத்துக் கணிதத்தையும், இயற்கைப் பொருளியலையும் ஏற்றுக் கொள்ளும் தன்மையனவாகக் காணப்பட்ட போதிலும், புதியமுறையைக் கற்றுக்கொடுக்க என்னை நீ அனுமதித்தாய்! நீ என்மீது சினந்துகொண்டதில்லை! அறிவையும், மனித அன்பையும், பண்பாட்டையும், உதவவேண்டும்—உழைக்கவேண்டும் என்ற உண்மைத் தன்மையையும் நீ காட்டினாய்! விடுதலை வேட்கை

புணர்வைத் தடுக்காமலும், தனக்குக் கேடுவருமோ என்பதைப்பற்றிக் கவலைப்படாமலும், நாடோடியும், வெளிநாட்டானும், வெறுக்கப்பட்டவனுமாகிய என்னை நண்பனாகவும், உன்னோடு சேர்ந்த ஒருவனாகவும் வைத்துப் போற்றிவந்தாய்! நான் வறுமையால் வாடாமல், கல்வி கற்றுக்கொடுப்பதன் மூலம் என்னை நானே காப்பாற்றிக்கொள்ள அனுமதித்தாய்! உன்னுடைய அன்பின் நிழலிலே இருந்து, உன்னுடைய சுவர்களுக்கிடையில் தங்கி, இரண்டாண்டுக்காலம் செலவழித்த ஒழிவன் மீது தூற்றப்பட்ட பழிச்சொற்களையெல்லாம் நீ ஒதுக்கித்தள்ளினாய்!" என்பது அவரது பாராட்டு மொழிகளில் சிலவாகும்.

இவ்வளவு அன்போடும் அமைதியோடும், மதிப்போடும் பாதுகாப்போடும் இருந்துவந்த இந்த இடத்தை விட்டு, ஏன் புருனோ அகன்றார் என்பதற்கான காரணம் தெரியவில்லை. சொற்போர்கள் நடைபெறாத ஒரு இடத்தில் இருந்துகொண்டேயிருந்தது அவருக்குச் சோர்வைத்தந்ததுபோலும்!

1588-ல் புருனோ விர்டெம்பர்க்கை விட்டு, பிரேக் நகர் சென்றார். அங்கு இரண்டாம் ருடால்ப் என்ற பேரரசன் ஆண்டுவந்தான். அவன் கல்வி கேள்விகளில் மேம்பாடுடையவன் என்பதைக் கேட்டறிந்து, புருனோ அவனது அரசவைக்களம் புகுந்தார். புருனோ கணிதம் பற்றிய பல கருத்துக்களை வெளியிட்டார். அவைகள் வேத நூல் கருத்துக்களுக்கு மாறுபட்டனவாக இருந்ததாலும், அரசன் மதநம்பிக்கையுடையவனாக இருந்த காரணத்தாலும், அவன் புருனோவுக்கு ஆதரவு தரவில்லை, வெறுக்கத் தொடங்கினான்.

அங்கிருந்து ஹெல்ம்ஸ்டாட் நகர் நோக்கிச் சென்றார். அங்கு பிரன்ஸ்விக் ஆளும் மன்னனாக இருந்தான். அவ

னுடைய மூத்த மகனுக்கு, புரூனே, இரண்டு மூன்று திங்கள்கள் படிப்புக் சொல்லிக்கொடுக்கும் ஆசிரியராக இருந்தார். அரசன் இறந்தவுடன் புரூனேவுக்கு ஆதரவு அற்றுப்போயிற்று: எதிர்ப்புக் கிளம்பிற்று. போதியஸ் என்ற பாதிரியார், சர்ச்சில், மக்கள்கூடியிருக்கும்போது, புரூனேவை மதவிலக்குச் செய்து, அவரை மதங்கெட்டவராக எல்லோரும் மதிக்கவேண்டும் என்றும் கட்டளை பிறப்பித்தார். ஓராண்டுக்காலம் வரையில் புரூனே எப்படியோ சமாளித்துக்கொண்டு அந்த நகரிலேயே இருந்தார். பிறகு அந்த நகரைவிட்டு வேறிடம் பார்க்கும் நாடோடியாக ஆனார்.

1590-ம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து, 1591-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் வரையில், புரூனே, பிராங்பர்ட் நகரிலிருந்து, சில புத்தகங்களை வெளியிட்டார். சர் பிலிப் சிட்னிக்குத் தெரிந்த நண்பர் ஒருவர், புரூனேவுக்கு, உண்டி, உறையுள், பாதுகாப்பு அளித்து, அவரைக் காப்பாற்றிவந்தார். இந்த நிலையில் இத்தாலியிலிருந்து புரூனேவுக்கு முடங்கல் ஒன்று வந்தது. ஜியோவன்னி மோசெனிகோ என்பவர், புரூனேவை வெனிஸ் நகரம்வந்து சேரும்படியும், ஆசிரியர் பொறுப்பு அவருக்கு அளிக்க விரும்புவதாகவும், தக்க பாதுகாப்பும் வரவேற்பும் அவருக்கு உறுதியாக அளிக்கப்படும் என்றும் அந்த முடங்களில் குறிப்பிட்டிருந்தார். மோசெனிகோ என்பவர் ஒரு பெரும் பணக்காரராவர். அவரிடம் பாதுகாப்புக்கான எல்லா வசதிகளும் இருந்தன.

முடங்கலைப் படித்து முடித்ததும், அந்த முடங்கல் புரூனேவின் கைகளிலிருந்து, அவரை அறியாமலேயே கீழே விழுந்தது; புரூனே மெல்ல எழுந்தார்; சாளரத்தின் ஓரத்திலே போய் நின்று, வெளியே பார்த்தார். இத்தாலியைப் பற்றிய நினைவுகள் அவருடைய உள்ளத்தில் உருண்டோடின. பத்தாண்டுக் காலம் வட ஐரோப்

பாவின் பகுதிகளில் சுற்றிச் சுழன்று, அல்லற்பட்டு ஆதரவற்றுக் கிடந்த புருனோவுக்கு இத்தாலியைக் காண வேண்டும் என்ற ஆவல் அவர் உள்ளத்தே கனிந்து கொண்டிருந்தது. இத்தாலிக்கு மீண்டும் ஏதும் வாய்ப்பு ஏற்பட்டவுடனே பெருமகிழ்ச்சி கொண்டார். கண்கள் ஒளிர்த்தன; இதயம் குளிர்ந்தது. விரைவில் ஒரு வாட்டம் தோன்றி, அவருடைய முகத்தைக் குறுகச் செய்தது.

"மத விசாரணை என்ற ரோமன் ஓநாயின், கூரிய நகங்களிலிருந்து, எந்தச் சீமான் வீடுதான் என்னைக் காப்பாற்றிவிட முடியும்? இத்தாலிதான் என்னைத் தாலாட்டி வளர்த்தது; அதே இத்தாலி எனக்குக் கல்லறை கட்டவுங்கூடும்! வெனிஸ் நகரில் தங்கி, என்னுடைய கருத்துக்களை இத்தாலி கேட்டால், எனக்குக் கல்லறை அமைக்க முயலக்கூடும் என்றும் அஞ்சுகிறேன்! ஒரு நகரம் எனக்கு எதிர்ப்பைத் தந்தால், வேறோர் நகரம் எனக்கு ஆதரவு அளிக்க முன் வருகிறது! எனவே வெனிஸ் எனக்குப் பாதுகாப்பு அளிக்கும் என்றே கருதுகிறேன்! ஓ! இத்தாலி! என்னுடைய அரண்மனைகள் இருட்டறைகளை மறைத்துவைத்திருக்கின்றன; உன்னுடைய அழகு அவைகளின் முகமூடியாக விளங்குகின்றது!" என்ற எண்ண ஓட்டம் அவனுடைய உள்ளத்தில் ஓடிற்று.

இத்தாலிக்குத் திரும்புவோமா, வேண்டாமா என்ற ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு, திரும்புவது என்ற முடிவுக்கு வந்தார். தாயகத்தைக் காணவேண்டும் என்ற ஆவல் இறுதியில் வெற்றிபெற்றது. புருனோ இத்தாலி நோக்கிப் புறப்பட்டார். சுவிட்ஜர்லாந்தை அடைந்து, அங்கு ஜூரிச் என்ற இடத்தில் சில நாட்கள் தங்கியிருந்துவிட்டுப், பிறகு ஆலப்ஸ் மலையைக் கடந்து இத்தாலி நாடு புகுந்தார்.

முதலில் பாதுவா நகரம் போக வேண்டும் என்ற ஆவல் எழுந்தது அங்கே பல்கலைக் கழகம் இருந்ததால், அங்குள்ள கற்றறிந்த இளைஞர்களிடையே, அறிவியல் பற்றிய கருத்துக்களை வெளியிட வேண்டும் என்ற ஆவல் புரூனோ பாதுவாவில் சில நாட்கள் தங்கியிருந்தார். அவர் பாதுவா வந்து சேர்ந்திருக்கும் செய்தி சிறிது நாட்களுக்குள் இத்தாலி முழுவதும் பரவி, போப்பாண்டவர் காதுக்கும் எட்டிவிட்டது. எங்குனும் பரபரப்பு உண்டாகிவிட்டதைக் கண்ட புரூனோ அங்கிருந்து வெனிஸ் நகரத்துக்கு ஓடிப்போய்ச் சேர்ந்தார்.

வெனிஸில், புரூனோவுக்கு அழைப்பு விடுத்தவராகிய மோசெனிகோவின் மாளிகைக்கு, 1592-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் சென்றடைந்தார். அங்கு அந்தச் சீமான் அவருக்கு வேண்டிய எல்லா வசதிகளும் செய்து தந்தார். இரண்டு திங்கள் காலம் வரையில், புரூனோ அந்த இளைஞராயிருந்தச் சீமானின் மகனுக்குத் தாம் கற்றறிந்தவை முழுவதும் சொல்லிக் கொடுத்தார். நீரோடையில் படகில் உலாவச் செல்லும்போதெல்லாம் அவர்களிருவரும் அறிவியல் பற்றியும், கோபர்னிகஸின் கோட்பாடுபற்றியும், அறிவியலைப்பற்றிக் கத்தோலிக்க மதம் கொண்டிருக்கும் கருத்துப்பற்றியும் பேசிச் செல்வதுண்டு. களங்கமற்ற வான் தெரியும்போது, புரூனோ அண்ணாந்து பார்த்து, அதிலுள்ள நட்சத்திரங்கள் பற்றியும், பிற உலகங்கள் (கோள்கள்) பற்றியும் அண்டம் முடிவற்று விரிந்து கிடக்கும் தன்மைபற்றியும் வியந்து கூறி, தம் மாணவனை மகிழ்விக்க விரும்புவார். அந்தச் சீமான் மகன் புரூனோ சொல்வது அத்துணையையும் அப்படியே உற்றுக் கேட்டுக்கொள்வான். ஒவ்வொரு நாளும் கேட்பதை, மறுநாள், அப்படியே, அங்கு, சீமானை மறைவாக வந்து காணும் பாதிரியார் ஒருவரிடம், அந்தச் சீமான் சொல்லிவிடுவார். தம்முடைய கருத்துக்கள், பாதிரியார் ஒருவரிடம், சீமானுக்

அன்ருடம் மறைவாக அறிவிக்கப்படுகின்றன என்பதை வெள்ளையுள்ளம் படைத்த புரூனே அறியவில்லை. அவர் எப்படி அறிவார்? சூதும், சூழ்ச்சியும், வஞ்சகமும், நாணயமற்ற தன்மையும், நேர்மையுற்ற போக்கும், நீதியற்ற நெறியும், பொய்மையும், புணைசுருட்டும் மறைவும் பாதிரியாரிடம் எதிர்பார்க்கக்கூடியவைகளேயன்றிப், பகுத்தறிவுவாதியிடம் யார்தான் எதிர்ப்பார்கள்? பாம்பின வாயில், தானே போய் விழுந்த தேரைபோல், புரூனே அந்தச் சீமான் மாளிகையிலே விருபபி இருந்து வந்தார்.

செப்டம்பர் திங்களில், வெண்ணிலா காய்ந்து கொண்டிருந்த ஒருநாள் இரவு, புரூனே, அட்ரியாட்டிக் கடலின் அலைகள் மோதும் மண்டபத்தின் தூண் ஒன்றிலே, சாய்ந்துகொண்டு, இயற்கையின எழிலைக்கண்டு மகிழ்ந்துகொண்டிருந்தார். நிலவொளியிலே துள்ளி எழும் அலைகள் சதிராடும் காட்சியைக் கண்டு களித்தார். "வாழ்க்கை எவ்வளவு இன்பகரமாக இருக்கிறது! இயற்கை எவ்வளவு அழகாக இருக்கிறது! அப்படியிருந்தும்,முட்டாள்கள் நரகத்தின் நெருப்பைப்பற்றி பேசுகிருர்கள் ; உடன் பிறந்தோரைச் சபிக்கிருர்களே!" என்று தமக்குள்ளே எண்ணிச் சிரித்துக் கொண்டார்.

புரூனே, தம்மையும் மறந்து இயற்கை இன்பத்தை நுகர்ந்து கொண்டிருக்கும்போது, ஒரு படகு ஓசையிடாமலும், விரைவாகவும் வந்து, மண்டபத்தின் பக்கத்தில், தண்ணீரில் விழுந்திருந்த அதன் நிழலில் தங்கிக் கொண்டது. அந்தப் படகு வந்ததையோ, மண்டபத்தின் பக்கத்தில் வந்து தங்கியிருந்ததையோ புரூனே கவனிக்கவில்லை.

"கடவுள் இல்லாமல் வாழ்வு எவ்வளவு அழகாக இருக்கிறது! இயற்கைப் பெருந்தாயே! நீ எவ்வளவு

அமைதியாய், உறுதியாய், மாறுதல்களற்ற தன்மைக்கிடையே மாறுதல்களைச் செய்பவளாய் இருக்கிறாய்! அழகில் எவ்வளவு சிறந்து விளங்குகிறாய்! பெருந்தன்மையில் எவ்வளவு புகழோடு காணப்படுகிறாய்! அவர்களுடைய வேடிக்கைச் செயல்களையெல்லாம் நான் வழிபடவேண்டும் என்பதற்காக, உன்னையே நிந்தித்து ஒதுக்குப்படிச் சொல்கிறார்களல்லவா? ஓ! அழியாப் பேரழகே!" என்று மெல்லிய குரலில் தமக்குத்தாமே கூறிக்கொண்டு, பிறகு நிமிர்ந்து நின்று, இரண்டு கைகளையும் நீட்டி, தொடர்ந்து "ஓ! எல்லையற்ற பெருவெளியே! உன்னுடைய கட்டுப்பாடற்ற விடுதலையை விட்டுவிட்டு நான் எப்படி வாழ்வேன்? உன்னுடைய பேரொளிக் கதிர்களை விட்டுவிட்டு, நான் எப்படி நிலைத்து நிற்பேன்?..." என்று மகிழ்ச்சிப் பெருக்கால் வாய்விட்டுக் கூறினார்.

அந்த நேரத்தில் மறைந்திருந்த படகு, படிக்கட்டுகளின் அருகில் வந்து நின்றது. முகமூடி தரித்த வஞ்சகர்கள், படகிலிருந்து இறங்கி, ஒரு கறுப்புத் துணியைப் புரூனோவின் தலைமீது வீசி, புரூனோவை அப்படியே அழுத்திப் பிடித்துக்கொண்டனர். அவருடைய ஒளிர்ந்த கண்கள் அதற்குப் பிறகு அலைகளின் அழகைக் காணவில்லை! அவருடைய கைகள் நீலவான் நோக்கி நீட்டப்படவில்லை! மதவிசாரணை என்னும் வெறி நாய்களின் பிடியிலே ஜியார்டனோ புரூனோ சிக்குண்டார்!

புரூனோ இருட்டறையில் தள்ளப்பட்டார்; நிர்வாணமாக்கப்பட்டார்; அவருடைய உடல் இரும்புச் சித்ரவதைப் பொறியோடு பொருத்தப்பட்டது; அவருடைய மணிக்கட்டுகளும், மூட்டுகளும் அந்தப் பொறியோடு இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டன; தலை பின்னால் சாய்த்து இழுக்கப்பட்டது; ஆனால் உதடும் நெற்றியும் உறுதியிழக்கவில்லை; ஒளி வீசும் கண்கள்

அச்சப்படவில்லை! இந்த நிலைக்குக் காட்டிக்கொடுத்தவன் அந்தச் சீமான் ஜியோவன்னிமோசெனிகோதான்! இவ்வளவும் 'அருளுடைய' ஆண்டவன் பேரால், 'அன்புடைய' ஏசுவின் பேரால், 'பண்புடைய' மதத்தின் பேரால் செய்யப்பட்டன!

இரும்புப் பொறியிலே வைத்து, உருளைகளைச் சுழற்றி, அவருடைய உடலைப் பிழிந்தார்கள், 'அன்பு' மதத்தவர்கள். அவருடைய உடல் முழுவதும் புண்ணாக்கப்பட்டது; புண்களிலிருந்து குருதிச்சொட்டுகள் கசிந்து சொட்டியவண்ணமிருந்தன; அவருடைய கை கால்கள் செயலற்றுப் போயின; அவருடைய நெற்றியும், உதடுகளும் வலி தாளமாட்டாமல் வதங்கியிருந்தன.

'ஏ, மத நிந்தகனே! இப்பொழுதாவது உன்னுடைய குற்றத்தை நினைந்து வருந்து! நீ எந்தக் கடவுளை நிந்தனை செய்தாயோ அந்தக் கடவுளை பார்த்து வேண்டிக்கொள்! நீ எந்த சர்ச்சை ஒதுக்கினாயோ, அந்தச் சர்ச்சை நோக்கி இறைஞ்சு! உன்னுடைய ஆண்டை கடவுள்தான் என்பதை ஒப்புக்கொள்! உன்னுடைய மத நிந்தனைகளுக்காக வருந்து! இவ்வளவும் செய்தால், இப்பொழுது கூட உனக்கு அருள்பாலிக்கப்படும்!" என்று அவரிடம் கூறப்பட்டது.

"நான் எந்த உண்மையை வழிபடுகிறேனோ, அந்த உண்மை என்னை இப்பொழுதும் உண்மையாகவே இருக்கச்செய்து காப்பாற்றி வருகிறது" என்ற சொற்கள், வலி தாளாமல் வருந்தும் புருனோவின் வாயினின்றும், ஒன்றன் பின் ஒன்றாக வெளிப்பட்டன.

உணர்ச்சியற்றுக் கிடந்த புருனோவின் உடல் அந்த இரும்புப் பொறியினின்றும் அகற்றப்பட்டுப், பாதாளச்

சிறை ஒன்றில் கொண்டுபோய்த் தள்ளப்பட்டது. ஆறு ஆண்டுக்காலம் அந்த இருட்டறையிலேயே கிடந்தார். ஜியார்டனோ புரூனோ! உண்மையை உரைத்ததற்காக; பொய் சொல்ல மறுத்ததற்காக! அந்த ஆறு ஆண்டுக் காலத்தில கதிரவனொளி அவர்மேல் பட்டதில்லை; எந்த நண்பரின் குரலையும் அவர் காது கேட்டதில்லை: எந்தச் சிரிப்பையும் அவரது ஏக்கங்கொண்ட கண்கள் பார்த்ததில்லை; எந்த ஒரு புத்தகமும் அவரது தனிமையில் மகிழ்ச்சியூட்ட வந்ததில்லை: எந்த ஒரு பேனாவும் அவர் கையில் கொடுக்கப்பட்டதில்லை, அந்தச் சிறை உயிரோடு புதைக்கப்பட்ட அவரின் கல்லறையாகக் காட்சியளித்தது, சிந்திக்கத் துணிவுகொண்ட ஒரு மனிதனிடம், கிருத்தவன் காட்டிய 'கருணை' அது தான்!

ஆறு ஆண்டுக்காலம் வெனிஸ் நகரக் கல்லறையிலும், இரண்டு ஆண்டுக்காலம் ரோம் நகரிலும் கழிந்தன ரோம் நகரிலிருந்த இரண்டு ஆண்டுக் காலமும் விசாரணையிலேயே முடிவடைந்தது வெனிஸ் இருட்டறையில் கிடந்ததால், புரூனோவின் கரிய தலைமயிர் வெண்மை நிறம் பெற்றது; ஒளிபெற்றிருந்த அவரது கண்கள் இப்பொழுது கதிரவன் வெளிச்சத்தைக் கண்டு கூசின; வலிவடைந்திருந்த அவரது கைகால் எலும்புகள் வளைந்து காணப்பட்டன. வயதானக் கிழவர்ன் தோற்றம்போல அவரது உடலம் மாறியிருந்தது. கிருத்தவர்கள் ஏசுநாதரின் பேரால், அவரைப் பட்டினி போட்டு, சித்ரவதைக்கு உள்ளாக்கி வைத்திருந்தனர். நல்ல வலிவுள்ள மனிதனைத் தோற்றமளிக்கவேண்டிய காலத்தில், அவர், தொண்டு கிழவனைக் காட்சியளித்தார்!

எட்டாண்டுச் சித்ரவதைக் கொடுமைகளுக்குப் பிறகு, அவர் சர்ச் நீதிபதிகளின் முன்னால் கொண்டு

வந்து நிறுத்தப்பட்டார். அவர் நாத்திகன் என்று கூறப்பட்டு மதவிலக்குச் செய்யப்பட்டார்! அவர் திருத்தப்படமுடியாதவர்; ஒழிக்கப்படவேண்டியவர் என்று வெளிப்படையாகச் சொல்லப்பட்டார்! அவர், ஒரு சொட்டுக் குருதியும் சொட்டாதவகையில், நெருப்புக் குண்டத்தில் போட்டுப் பொசுக்கப்படவேண்டும் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டார்! அந்தப் பணியை நிறைவேற்றுவதற்காக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்!

அவர்கள் தீர்ப்புச் சொல்லிக்கொண்டு இருக்கும்போது, புருனோ வீர உணர்ச்சியோடு எழுந்து நின்றார்; ஆனால் மதவாதிகள் அவரை வலுக்கட்டாயமாகத் தங்களுடைய ஆற்றலைப் பயன்படுத்தி, அவரை மண்டியிட்டுக் கேட்கும்படி செய்தனர். தீர்ப்புக்கூறி முடிந்ததும், மண்டபம் முழுதும் அதிரும்படியாகப், புருனோ பெருத்த குரல் ஒன்று எழுப்பினர். பல ஆண்டுகள் இருட்டறையிலே கிடந்ததால், அவருடைய குரல், முன்னைப் போன்று மென்மையாக அமையாமல், மிகக் கரடுமுரடாக இருந்தது. "தீர்ப்பைக் கேட்கும்போது எனக்கு ஏற்பட்ட அச்சத்தைவிட, தீர்ப்பை வெளியிடும்போது உங்களுக்கு இருந்த அச்சம் அதிகமாக இருந்திருக்கிறது என்பதை நான் நன்கு அறிகிறேன்" என்ற குரலை எழுப்பிவிட்டு தலைநிமிர்ந்தவண்ணம், உண்மைக்கு உயிர் துறக்கப் போகிறோம் என்ற மகிழ்ச்சியுடன், மண்டபத்தை விட்டு வெளியேறினர்.

புருனோ தம்முடைய கருத்தை மறுத்து வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டால், உயிரோடு விடப்படுவார் என்று சொல்லி, எட்டு நாட்கள் 'கருணை'யாக அளிக்கப்பட்டன. பத்து ஆண்டுகாலம் ஐரோப்பாவில் அலைந்து திரிந்தபோதும், எட்டு ஆண்டுக்காலம் சிறையில் கிடந்து அவதிப்பட்டபோதும் தம்முடைய

கருத்தை மாற்றிக்கொள்ளவும், மன்னிப்புக் கோரி வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ளவும் இணங்காத தாம், கடைசி எட்டு நாட்களுக்குள் தம் செய்கைக்கு வருந்தி மன்னிப்புக் கோருவோம் என்று மதவாதிகள் எதிர்பார்த்தது பைத்தியக்காரத்தனமாகும் என்று எண்ணி, புரூனே எள்ளி நகையாடினார்.

1600-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 17-ம் நாள் மலர்ந்தது; புரூனே சாகடிக்கப்படவேண்டிய நேரமும் வந்தது.

காம்போ டெய் பிஃயோரிஎன்ற இடத்திற்குப் புரூனே அழைத்துச் செல்லப்பட்டார். அவர் போகும்போது மதவெறியர்கள் வழிநெடுக ஏராளமாகக் கூடிநின்று கூச்சலிட்டுக் கேலியும் கிண்டலும் செய்தார்கள், போப்பாண்டவரைக் கண்டு வழிபட வந்திருந்த ஏராளமான மதபக்தர்கள் இந்தச் செயலில் ஈடுபட்டனர். புரூனே மஞ்சள் நிறமுடைய துணியால் அணிவிக்கப்பட்டிருந்தார். மதநிந்தகன் என்பதைக் காட்டுவதற்கு மஞ்சள்நிறத் துணியைத்தான் அக்கால மதவெறியர்கள் பயன்படுத்தினர். அந்தக் துணியில் பேய்கள் போன்றும், நெருப்பு எரிவதைப்போன்றும், சிலுவைகளும் படங்களாகப் பொறிக்கப்பட்டிருந்தன. புரூனே நிமிர்ந்த தலையோடு, ஒளி வீசும் கண்களோடு, தளராத தயங்காத அடிகள் போட்டு, அமைதியுடன் நடந்துசென்றார். ஒரு பாதிரியார் சிலுவை ஒன்றைப் புரூனேவின் முகத்தின் எதிரே" பிடித்து, அதனை அவர் முகத்தோடு ஒத்த வந்தார்; உடனே புரூனே அதன்மேல் தம் முகம் படாதவண்ணம், தம் தலையை அப்பால் திருப்பிக் கொண்டார். பிறகு நெருப்புக் குண்டத்தின் நடுவே நடப்பட்டிருந்த மரத்தில் புரூனே இறுகக் கட்டப்பட்டார். அவருடைய வாயிலிருந்து ஒரு சொல்லும் பிறக்கவில்லை. ஆண்டவன் பெயரால், ஏசுவின் பெய

னால், அன்பு மதத்தின் பெயரால் அவரைச் சுற்றி விறகுகள் அடுக்கப்பட்டுத், தீ மூட்டப்பட்டது. அவரைச் சுற்றி தீ கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. அவரிடமிருந்து ஒரு கூச்சலும் எழும்பவில்லை. தீயும் புகையும் அவரது முகத்தைக் கப்பிக்கொள்வதற்கு முன்பு, கடைசி முறையாக மக்கள் பார்க்கும்போது, அவருடைய முகம் பெருமிதத்தோடு கூடிய பொலிவை வீசியவண்ணமிருந்தது. மிக விரைவில், தீயும், புகையும் அவர் உடலையெல்லாம் மறைத்துவிட்டன. புருனோவின் உருவத்தோற்றம் அழிந்தது; மறைந்தது!

புருனோவின் உடலம் சிதைக்கப்பட்டது; ஆனால் அவருடைய உள்ளம், எங்கெல்லாம் உறுதியும் உண்மையும், நேர்மையும், நீதியும், அறிவும், அன்பும், நாணயமும் நல்ல பண்பும் நிலவிற்றோ, அங்கெல்லாம் சிறந்துவிளங்கிற்று! உண்மைக்காக உயிர்நீத்த உத்தமரின் பட்டியலிலே சிறந்த ஒரு இடத்தை என்றென்றும் பெற்றுவிட்டார், ஜியார்டனோ புருனோ! அவர் புகழ் அவனியில் என்றும் மங்காது, மறையாது! பகுத்தறிவுவாதிகளின் உள்ளத்தில் கொலு வீற்றிருக்கும் அழியா ஓவியமாவார் அவர்!

ஜியார்டனோ புருனோ கடமையைச் செய்ய விரும்புவோர்க்கு, உண்மையாகப் பாடுபடுவோர்க்கு உறுதியையும் ஊக்கத்தையும் என்றென்றும் பயக்கும் ஒரு பெருஞ் சொற்றொடராகும்!

புருனோவே வேறு ஒருபொழுது குறிப்பிட்டார், "ஒரு நூற்றாண்டில் சாவக் கற்றுக்கொள்வது என்பது, வருகின்ற பல நூற்றாண்டுகளிலும் வாழக் கற்றுக்கொள்வதாகும்" என்ற சொற்கள் தாம், எரிக்கப்பட்டபோது அவர் நின்ற நிலையால், உலகுக்கு உணர்த்தப்பட்ட உயரிய உண்மையாகும்!

——:: ——

ARCH

## வரலாற்று ஏடுகள்

ஆசிரியர். "கௌதமன்"

| | |
|---|---|
| பிளேட்டோ | 1 0 0 |
| கெரிபால்ட்டி | 1 8 0 |
| அலெக்ஸாண்டர் | (அச்சில்) |

ஆசிரியர். "அருணாசலம்"

| | |
|---|---|
| கலங்கரை விளக்கம் (திரு. வி. க.) | 0 8 0 |

விபரங்கட்கு :

**முரசொலிப் பதிப்பகம்**

**131. பிராட்வே,**

சென்னை–1.


*Jacket Printed at Vinodan Press, Madras–1,*